
தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 259 ஆவணி 07
Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94
திருச்சி, சனி, ஆகஸ்ட் 23, 2025
▸சென்னை ▸மதுரை ▸திருச்சி ▸கோவை ▸நெல்லை ▸சேலம் ▸வேலூர் ▸புதுச்சேரி
பக்கம் 8 ₹3.00



**இந்தியா மீதான வரிவிதிப்பு அடுத்த வாரம் அமலாகிறது: ட்ரம்ப் ஆலோசகர் தகவல்**
....2-ம் பக்கம்

**ஜனாதிபதி திரவுபதி முர்முவுடன் இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா சந்திப்பு**
...3-ம் பக்கம்

**இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுவில் மாற்றம் பி.சி.சி.ஐ. அதிரடி முடிவு**
....6-ம் பக்கம்

## மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில்

# 644 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்




● சென்னை மாநிலக்கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 644 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மா.சுப்பிரமணியன், மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், முதன்மைச்செயலாளர் ப.செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை, ஆக. 23-

**சென்னை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் 644 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.**

மருத்துவப்பணிகளுக்கு பணியார் தேர்வு பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10.15 மணியளவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெறும் நிகழ்ச்சியில் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 182 உதவி மருத்துவ அலுவலர்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 48 பல் மருத்துவர்கள், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 324 அறுவை அரங்கு உதவியாளர்கள், தமிழ்நாடு சுகாதார போக்குவரத்து துறைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு திறன்மிகு உதவியாளர் நிலை-2 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 18 உளவியல் உதவி பேராசிரியர்கள் மற்றும் மருத்துவ உளவியலாளர்கள், மருந்து கட்டுப்பாடு இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 17 மருந்துகள் ஆய்வாளர்கள், குடும்ப நல இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 54 வட்டார சுகாதார புள்ளியிலாளர்கள் ஆகிய பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட மொத்தம் 644 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்குகிறார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்து சமய அறநிலையத்துறை சார்பில் புதிய திட்டப்பணிகள்-முதல்வர் தொடங்கி வைத்தார்

சென்னை, ஆக. 23-

**இநது சமய அறநிலையததுறை சார்பில் புதிய திட்ட பணிகளை முதல்வர் தொடங்கி வைத்தார்.**

சென்னை புரசைவாக்கம், கங்காதரேசுவரர் கோவிலில் 3.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் மற்றும் அர்ச்சகர்கள் குடியிருப்பு கட்டும் பணி; ராயப்பேட்டை சித்தி புத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் கோவிலில் 2.64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; பழநி தண்டாயுதபாணி சுவாமி கோவில் சார்பில் 2.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சித்த மருத்துவக் கல்லூரி சுற்றுச்சுவர் கட்டும் பணி; சென்னை மயிலாப்பூர், கபாலீசுவரர் கோவிலில் 1.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவில் முழுவதும் வண்ண விளக்குகளால் ஒளிரூட்டும் பணி, திருவண்ணாமலை மாவட்டம், அ.கோ.படைவீடு, ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயிலில் 1.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி என மொத்தம் 124 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 17 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

காணொலிக் காட்சி வாயிலாக தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து மாவட்ட கலெக்டர் இளம்பகவத், திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோவில் தக்கார் அருள்முருகன், திருச்செந்தூர் நகரசபை தலைவர் சிவ ஆனந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்களும், திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து சி.என். அண்ணா துரை எம்.பி., மாவட்ட கலெக்டர் தர்ப்பகராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, ஆயிரம் ஆண்டுகள் பழமையான கோவில்களான திருநெல்வேலி மாவட்டம். களக்காடு சத்தியவாகீஸ்வரர் கோவில் 8.48 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், பெருமுக்கல், காமாட்சியம்மன் கோவில் 7.63 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான், கைலாசநாதசுவாமி கோவில் 4.16 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா உத்திர ரங்கநாத சுவாமி கோவில் 2.96 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், திருமோகூர், காளமேகப்பெருமாள் கோவிலுக்கு 2.81 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டம், கல்விமடை திருநாகேஸ்வர முடையார் கோவில் 2.10 கோடி ரூபாய் மதிப்பீட்டி லும், திருவண்ணாமலை மாவட்டம், புதுக்காமூர் புத்திரகாமேஸ்வரர் கோவில் 1.56 கோடி ரூபாய்

(கடைசி பக்கம் பார்க்க)

## டெல்லியில் தெரு நாய்களை காப்பகங்களில் அடைக்கத்தேவையில்லை: உச்சநீதிமன்றம்

புதுடெல்லி, ஆக. 23-

**டெல்லியில் உள்ள அனைத்து தெரு நாய்களையும் காப்பகங்களில் அடைக்கத் தேவையில்லை என தனது முந்தைய உத்தரவில் இருந்த கெடுபிடிகள் சிலவற்றை தளர்த்தி புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது உச்ச நீதிமன்றம்.**

டெல்லியில் உள்ள அனைத்து தெரு நாய்களையும் பிடித்து காப்பகங்களில் அடைக்கத் தேவையில்லை. அவற்றைப் பிடித்து கருத்தடை சிகிச்சை செய்து, புழுக்கள் நீக்க மாத்திரைகள் கொடுத்துவிட்டு அவை எங்கே பிடிக்கப்பட்டனவோ அங்கேயே விட்டுவிடலாம். அதேவேளையில், ரேபிஸ் பாதிக்கப்பட்ட நாய்கள், ஆக்ரோஷமான தன்மையோடு இருக்கும் நாய்களை காப்பகங்களில் பராமரிக்க வேண்டும்.'' என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**உச்ச நீதிமன்ற உத்தரவின் 5 அம்சங்கள்**

தெரு நாய்களுக்கு கருத்தடை செய்து அவை எங்கே பிடிக்கப்பட்டதோ அங்கேயே விட்டுவிடலாம். ரேபிஸ் பாதித்த, ஆக்ரோஷமான நாய்களை விடுவிக்கக் கூடாது.

தெரு நாய்களுக்கு தெருக்களில் உணவளிக்கக் கூடாது. அதற்கு மாற்றாக டெல்லி மாநகராட்சி குறிப்பிட்ட ஓரிடத்தை ஏற்படுத்தித் தர வேண்டும். அதையும்மீறி தெரு நாய்களுக்கு தெருக்களில் உணவளிப்பவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட வேண்டியிருக்கும். தெரு நாய்களுக்கு உணவளிப்பது தொடர்பாக ஆங்காங்கே தகவல் பலகைகள் வைத்து அதில் உணவளித்தல் தொடர்பான தகவல்களை சரியாக குறிப்பிட வேண்டும்.

ஒவ்வொரு முனிசிபல் வார்டிலுல் அங்குள்ள தெரு நாய்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, உணவளிக்கும் பகுதியை மாநகராட்சி உருவாக்க வேண்டும். முன்னதாக, நாடு முழுவதும் நாய்க்கடி மற்றும் ரேபிஸ் காரணமாக உயிரிழப்புகள் அதிகரித்து வரும் நிலையில், இது குறித்த செய்தி அறிக்கையை கவனத்தில் கொண்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா மற்றும் நீதிபதி ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த விவகாரத்தை தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்தது.

இந்த வழக்கில் கடந்த 8-ம் தேதி நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், ‘டெல்லி, டெல்லி மாநகராட்சி, என்எம்டிசி ஆகியவை அனைத்து பகுதிகளில் இருந்தும், தெரு நாய்களை விரைவில் பிடிக்கத் தொடங்க வேண்டும். அதை எப்படிச் செய்வது என்பது பற்றி அதிகாரிகள் பரிசீலிக்க வேண்டும். அவர்கள் இதற்காக ஒரு படையை உருவாக்க வேண்டுமானால், அதை விரைவில் செய்யுங்கள். உடனடியாக அனைத்து பகுதிகளில் இருந்தும் தெரு நாய்களை கொண்டுவந்து

(கடைசி பக்கம் பார்க்க)

## கருணை அடிப்படையிலான பணி நியமன விதிமுறைகள் திருத்தம்

### அரசாணை வெளியிட்ட தமிழக அரசு

சென்னை, ஆக. 23-

**கருணை அடிப்படையிலான பணி விதிமுறை திருத்த அரசாணையை வெளிட்டது தமிழக அரசு.**

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் அறிவித்தபடி, 'கருணை அடிப்படையில் பணி நியமனத்துக்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் விதிகள், 2023' உருவாக்கப்பட்டது.

இந்த விதிகளைத் திருத்துமாறு சென்னை ஐகோர்ட்டு, அரசுக்கு உத்தரவிட்டது. மேலும், காலக்கெடு நிர்ணயிக்க வேண்டும் என்றும், மாநில அளவிலான ஒற்றை முன்னுரிமைப் பட்டியலை பராமரிப்பது குறித்துப் பரிந்துரைக்க ஒரு குழுவை அமைக்கவும் நீதிமன்றம் அறிவுறுத்தியது.

நீதிமன்ற உத்தரவுகளைப் பின்பற்றாததால், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றும் தொடரப்பட்டது. இதைத் தொடர்ந்து, தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு, நீதிமன்றத்தின் உத்தரவுகளைப் பின்பற்றி விதிகளில் திருத்தங்கள் செய்ய முடிவு செய்தது. அதன் அடிப்படையில், தற்போது புதிய திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கருணை அடிப்படையில் பணி நியமனங்களுக்கான விண்ணப்பங்கள் இனி மாநிலம் முழுவதும் ஒற்றை முன்னுரிமைப் பட்டியலாகப் பராமரிக்கப்படும். இனி விண்ணப்பங்கள் ஆன்லைன் போர்ட்டல் வழியாக மட்டுமே பெறப்படும். துறையின் இணையதளம் அல்லது நேரடி அலுவலகங்களில் கொடுக்கப்படும் விண்ணப்பங்கள் நீக்கப்படுகின்றன.

கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்கப்படும் என்று அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்தங்கள், கருணை அடிப்படையிலான பணி நியமன நடைமுறைகளை மேலும் வெளிப்படையானதாகவும், துரிதமாகவும் மாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுப் பணியில் இருந்த ஒருவர் எதிர்பாராத விதமாக இறந்தால், அவரது குடும்பத்தின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்க, அரசு ஒரு சிறப்பு திட்டத்தை செயல்படுத்துகிறது. அதன் கீழ், இறந்த அரசு ஊழியரின் குடும்பத்தில் தகுதியான ஒருவருக்கு அரசுப் பணி வழங்கப்படுகிறது. இந்தக் கருணை அடிப்படையிலான பணி, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

இறந்த அரசு ஊழியரின் மனைவி அல்லது கணவர், மகன், மகள், தத்து மகன் அல்லது தத்து மகள். திருமணம் ஆகாத அரசு ஊழியர் இறந்தால், அவரது குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன், தம்பி போன்றோருக்கும் பணி வாய்ப்பு கிடைக்கும்.

விண்ணப்பதாரரின் கல்வித் தகுதியின் அடிப்படையில், பெரும்பாலும் குரூப் 'சி' அல்லது குரூப் 'டி' பிரிவுகளில் உள்ள பணியிடங்கள் வழங்கப்படும். இறந்த ஊழியர் வகித்த அதே பதவியைப் பெற வாய்ப்பில்லை.

குடும்பத்தில் வேறு யாரும் அரசுப் பணியில் இருக்கக்கூடாது என்பது ஒரு முக்கியமான நிபந்தனை. மாநில அளவிலான பதிவு மூப்புப் பட்டியல்: இதுவரை மாவட்ட வாரியாக பராமரிக்கப்பட்டு வந்த பதிவு மூப்புப் பட்டியல், இனி மாநில அளவில் ஒரே பட்டியலாகத் தயாரிக்கப்படும். இதனால், அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் நியாயமான வாய்ப்பு கிடைக்கும்.

காலிப் பணியிடங்களின் அடிப்படையில், விண்ணப்பதாரர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குள் பணி நியமனம் வழங்கப்படும் வகையில் விதிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இது, நீண்டகாலமாக நிலுவையில் இருந்த விண்ணப்பங்களுக்கும் விரைவில் தீர்வு காண வழிவகுக்கும். ஏற்கெனவே நிலுவையில் உள்ள விண்ணப்பங்களும் இந்தப் புதிய மாநில அளவிலான பதிவு மூப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அதற்கேற்பப் பணி வழங்கப்படும்.

அரசு ஊழியர் இறந்த தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் விண்ணப்பம் செய்ய வேண்டும். விண்ணப்பதாரரின் குறைந்தபட்ச வயது 18 ஆக இருக்க வேண்டும்.

பொதுவாக, கணவன்/மனைவிக்கு 50 வயது வரையிலும், மகன்/மகள்/சகோதரருக்கு 40 வயது வரையிலும் வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள், கருணை அடிப்படையிலான பணி நியமன நடைமுறையை மேலும் வெளிப்படையானதாகவும், விரைவானதாகவும் மாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நாடாளுமன்ற வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்த நபரால் பரபரப்பு

புதுடெல்லி, ஆக. 23-

**நாடாளுமன்ற வளாகத்துக்குள் நேற்று காலையில் சுவர் ஏறி குதித்து அத்துமீறி நுழைந்த நபரால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.**

நாடாளுமன்ற வளாகத்துக்குள் நேற்று காலை 6.30 மணியளவில் ஒரு நபர் மரத்தில் ஏறி சுவர் மீது குதித்து உள்ளே நுழைந்தார். ரயில் பவன் பக்கத்திலிருந்து சுவர் தாண்டி குதித்து ஊடுருவியவர், புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தின் கருடா வாயிலை அடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுவர் ஏறி குதித்து ஊடுருவிய நபர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணை நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பெரும் அனலை கிளப்பிய நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்த நிலையில், நேற்று இந்த சம்பவம் நடந்துள்ளது.

கடந்த ஆண்டு இதேபோன்ற பாதுகாப்பு மீறல் சம்பவம் ஒன்று நடந்தது. அப்போது 20 வயதுடைய நபர் நாடாளுமன்ற வளாகத்தில் சுவர் ஏறி அனெக்ஸ் கட்டிடத்தின் உள்ளே குதித்தார். இந்த சம்பவத்தின் ஒரு வீடியோவும் வெளியாகியிருந்தது. அவரை சிஐஎஸ்எப் வீரர்கள் கைது செய்தனர், அவரிடம் ஆயுதம் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

## இந்தியா கூட்டணி வேட்பாளர் சுதர்சன் ரெட்டி தமிழகம் வருகை

டெல்லி, ஆக. 23-

**இந்தியா கூட்டணி குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் பி. சுதர்சன் ரெட்டி இன்று தமிழகம் வரவிருக்கிறார்.**

நாட்டில் இரண்டாவது உயரிய அரசமைப்புப் பதவியான குடியரசு துணைத் தலைவர் பதவிக்கு வருகிற செப். 9 ஆம் தேதி நடைபெறவிருக்கும் தேர்தலில், மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக மகாராஷ்டிர ஆளுநரும், தமிழகத்தைச் சேர்ந்த பா.ஜ.க. மூத்த தலைவருமான சி.பி. ராதாகிருஷ்ணன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இவரை எதிர்த்து தெலங்கானாவைச் சேர்ந்தவரும் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதியுமான சுதர்சன் ரெட்டி 'இந்தியா கூட்டணி' - எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். இருவரும் தங்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில் இந்தியா கூட்டணி, குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் பி. சுதர்சன் ரெட்டி இந்தியா முழுவதும் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு கோர உள்ளார்.

அந்தவகையில் பி. சுதர்சன் ரெட்டி நாளை தமிழகம் வரவிருக்கிறார். முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து குடியரசு துணைத் தலைவர் தேர்தலுக்கு ஆதரவு திரட்டுகிறார். அவருடன் காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் வரவுள்ளனர்.

## போதைப்பொருட்களுக்கு எதிராக தமிழ்நாடு முன்னணியில் உள்ளது - முதல்வர் பெருமிதம்

சென்னை, ஆக. 23-

**இந்தியாவில் போதைப்பொருட்களுக்கு எதிரான போரில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது என முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக ‘எக்ஸ்’ தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;-

“இந்தியாவில் போதைப்பொருட்களுக்கு எதிரான போரில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

மாநிலத்தின் மீது அவதூறு பரப்பும் முயற்சிகள், உண்மையான தரவுகள் மூலம் வீழ்த்தப்பட்டுள்ளன. தீவிர சோதனைகள் மற்றும் பறிமுதல் நடவடிக்கைகளே இதற்கு ஆதாரமாக உள்ளன.

போதைப்பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் கடந்த 2022-ம் ஆண்டு 80 சதவீதமாக இருந்த நிலையில், 2025 ஜூன் மாதம் 88 சதவீதமாக உயர்ந்துள்ளது.

மொத்தம் 4,889 வழக்குகளில் 3,493 குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர்.

இது இதுவரை இல்லாத அளவுக்கு அதிகமான எண்ணிக்கையாகும்.

இது தொடர்பாக தமிழ்நாடு டி.ஜி.பி. சங்கர் ஜிவால் ஆங்கில நாளிதழில் எழுதியுள்ள விரிவான கட்டுரையில் தரவுகளும், ஆதாரங்களும் நிரம்பியுள்ளன.”


இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -693.86 | -213.65 |
| பாயின்ட் 81,306.85 | பாயின்ட் 24,870.10 |



**தங்கம்**
1 சவரன் ₹73,720
1 கிராம் ₹9,215



**வெள்ளி**
1 கிலோ ₹128,000
1 கிராம் ₹128.00

**டாலர்** ₹87.45

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34


# இந்தியா மீதான வரிவிதிப்பு அடுத்த வாரம் அமுல்: ட்ரம்ப்பின் வர்த்தக ஆலோசகர் உறுதி

**வாஷிங்டன், ஆக. 23-**

இந்தியா மீதான வரிவிதிப்பு அடுத்த வாரம் திட்டமிட்டபடி அமலுக்கு வரும் எனறு ட்ரம்ப்பின் வர்த்தக ஆலோசகர் உறுதிபட தெரிவித்தார்.

ரஷ்ய எண்ணெய்யை தொடர்ந்து இறக்குமதி செய்வதன் மூலம் இந்தியா 'லாபம் தேடும் திட்டத்தை' நடத்துவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் வர்த்தக ஆலோசகர் பீட்டர் நவரோ குற்றம் சாட்டினார். மேலும், இந்திய இறக்குமதிகள் மீதான 50 சதவீத வரிவிதிப்பு அடுத்த வாரம் திட்டமிட்டபடி அமலுக்கு வரும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

வெள்ளை மாளிகைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய நவரோ, "பிப்ரவரி 2022-ல் ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுப்பதற்கு முன்பு, இந்தியா ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்கவில்லை. இந்தியா அப்போது தனது தேவையில் கிட்டத்தட்ட ஒரு சதவீதம் மட்டும் ரஷ்யாவிலிருந்து வாங்கியது. ஆனால், அது இப்போது 35 சதவீதமாக உயர்ந்துள்ளது. அவர்களுக்கு எண்ணெய் தேவையில்லை.



இது ஒரு லாபப் பகிர்வுத் திட்டம். இது ரஷ்யாவுக்கு பணத்தை மாற்றும் ஒரு சலவைத் தொழிற்சாலை போல செயல்படுகிறது என்பது தான் உண்மை.

மோடி ஒரு சிறந்த தலைவர். இந்த விஷயத்திலும், உலகப் பொருளாதாரத்திலும் உங்கள் பங்கு என்ன என்பதைப் பாருங்கள். இப்போது நீங்கள் செய்வது அமைதியை உருவாக்கும் வேலை இல்லை. இது போரை நிலை நிறுத்தும் வேலை மாதிரிதான்.

இந்தியாவுடனான எங்கள் வர்த்தகத்தால் அமெரிக்கர்களுக்கு என்ன லாபம் இருக்கிறது. இந்தியா வரியில் மகாராஜ். இது அமெரிக்க தொழிலாளர்களையும், அமெரிக்க வணிகத்தையும் பாதிக்கிறது. அவர்கள் எங்களிடமிருந்து பெறும் பணத்தை, ரஷ்ய எண்ணெய்யை வாங்கப் பயன்படுத்துகிறார்கள். ரஷ்யர்கள் இந்தப் பணத்தை ஆயுதங்களை உருவாக்கவும், உக்ரைனியர்களைக் கொல்லவும் பயன்படுத்துகிறார்கள்" என்றார்

ரஷ்யாவிடம், இந்தியா எண்ணெய் கொள்முதல் செய்வது என்பது ரஷ்யாவின் போருக்கு நிதியளிக்க உதவுவதாக ட்ரம்ப் நிர்வாகம் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது. இதனையடுத்து, இந்தியப் பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிக்கும் முடிவையும் அமெரிக்கா எடுத்தது.

இந்தியப் பொருட்கள் மீதான வரிகளை 50 சதவீதமாக இரட்டிப்பாக்கியதைத் தொடர்ந்து, இந்திய அமெரிக்க உறவில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதற்காக அமெரிக்கா இந்தியாவின் மீது கூடுதலாக 25 சதவீத வரியை விதித்த போதிலும், ரஷ்யாவிடம் மிகப்பெரிய அளவில் கச்சா எண்ணெய் வாங்கும் சீனாவுக்கு எதிராக அமெரிக்கா இது போன்ற நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

# குலசேகரப்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் எப்போது செயல்படும் மத்திய மந்திரி பதில்

**சென்னை, ஆக. 23-**

குலசேகரப்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் எப்போது செயல்பாட்டுக்கு வரும் என்று மத்திய மந்திரி ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

குலசேகரப்பட்டினம் ராக்கெட் ஏவுதளம் வரும் 2027-ஆம் ஆண்டுக்குள் முழு திறனுடன் செயல்பாட்டுக்கு வரும் என திமுக மத்திய மந்திரி ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் குலசேகரப்பட்டினம் ராக்கெட் ஏவுதளம் தொடர்பாக திமுக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி எழுப்பிய கேள்விக்கு மத்திய மந்திரி ஜிதேந்திர சிங் எழுத்துபூர்வமாக பதிலளித்தார்.

அதில், குலசேகரப்பட்டினம் ராக்கெட் ஏவுதளத்தை பொறுத்தவரை, கிழக்கு கடற்கரை சாலைக்கு மாற்றாக கையகப்படுத்த வேண்டிய நிலம் தவிர மற்ற நிலம் கையகப்படுத்திவிட்டதாக கூறினார். மேலும், ஏவுதள மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்து தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கட்டுமானப் பணிகள் தொடங்கி விட்டதாகவும், கட்டமைப்புப் பணிகள் வெவ்வேறு மையங்களில் நடைபெற்று வருவதாகவும் மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் பதிலளித்தார்.

அந்த வகையில், வரும் 2026-27 நிதியாண்டில் முழுமையாக ஏவுதளம் இயங்கத் தொடங்கும் என கூறிய அவர், இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி 985 கோடி ரூபாயில், 389 கோடி ரூபாய் பயன்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாநிலக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 644 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளார்.

# திருச்செந்தூர் கோவிலில் ஆவணித் திருவிழா: பச்சை சாத்தி கோலத்தில் சுவாமி வீதி உலா

**திருச்செந்தூர், ஆக. 23-**

திருச்செந்தூர் கோவிலில் ஆவணித் திருவிழாவில் பச்சை சாத்தி கோலத்தில் சுவாமி வீதி உலா நடைபெற்றது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆவணித் திருவிழா கடந்த 14-ந் தேதி கொடியேற்றதுடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. திருவிழாவின் 8-ம் நாளான நேற்று முன்தினம் அதிகாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, 5.30 மணிக்கு விசுவரூப தீபாராதனையும், 6.15 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகமும் நடந்தது.

8 மணிக்கு சுவாமி சண்முகர் வெள்ளை நிற பட்டு அணிந்து, வெள்ளை நிற மலர்கள் சூடி, பெரிய வெள்ளி சப்பரத்தில் வெள்ளை சாத்தி கோலத்தில், பிரம்மா அம்சமாக வீதி உலா வந்தார். பின்னர் மேலக்கோவிலுக்கு வந்த சுவாமிக்கு தீபாராதனை நடந்தது. பின்னர் பந்தல் மண்டபத்தில் உள்ள பச்சை



சாத்தி மண்டபத்திற்கு எழுந்தருளினார். அங்கு சுவாமிக்கு அபிஷேகம், அலங்கார மகா தீபாராதனை நடந்தது.

பகல் 1.15 மணிக்கு சுவாமி சண்முகர் வள்ளி, தெய்வானை அம்பாளுடன் பச்சை நிற கடைசல் சப்பரத்தில், பச்சை நிற பட்டாடை அணிந்து, பச்சை நிற மலர்கள் சூடி, பச்சை சாத்தி கோலத்தில் எழுந்தருளி பெருமாள் அம்சமாக 8 வீதிகளிலும் உலா வந்தார். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

10-ம் திருவிழாவான இன்று காலை 7 மணிக்கு மேல் 7.30 மணிக்குள் தேரோட்டம் தொடங்குகிறது. முதலில் விநாயகர் தேரும், பின்னர் சுவாமி குமரவிடங்கபெருமான், வள்ளி-தெய்வானையுடன் எழுந்தருளிய தேரும் வெளிவீதி நான்கிலும் பவனி வந்து நிலையை வந்து சேர்கிறது. அதேபோல் வள்ளியம்மாள் எழுந்தருளிய தேர் வெளி வீதி நான்கிலும் பவனி வந்து நிலையை சேரும். இதற்கான ஏற்பாடுகளை கோவில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ஞானசேகரன் மற்றும் கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# அமெரிக்கருக்கு ரூ.19 லட்சம் பைக்கை பரிசளித்த அதிபர் புதின்

**வாஷிங்டன், ஆக. 23-**

அமெரிக்கருக்கு ரூ.19 லட்சம் பைக்கை அதிபர் புதின் பரிசளித்தார்.

அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணம், ரஷ்ய எல்லையில் இருந்து 80 கி.மீ. தொலைவில் உள்ளது. ஒரு காலத்தில் இந்த மாகாணம் ரஷ்யாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது. கடந்த 1867-ம் ஆண்டில் ரஷ்யாவில் ஜார் மன்னர் ஆட்சி நடைபெற்ற போது அலாஸ்கா பகுதி அமெரிக்காவுக்கு ரூ.45 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது. இன்றளவும் அலாஸ்கா முழுவதும் ரஷ்ய கலாச்சாரம் நிறைந்திருக்கிறது.

கடந்த 15-ம் தேதி அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பும், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினும் அலாஸ்கா மாகாணம், ஆங்கரேஜ் ராணுவ தளத்தில் சந்தித்துப் பேசினர். அப்போது ரஷ்ய அதிபர் புதின், அமெரிக்காவின் அலாஸ்காவை சேர்ந்த மார்க் வாரனுக்கு ரூ.19 லட்சம் மதிப்புள்ள யூரல் பைக்கை பரிசாக வழங்கினார்.

இதுகுறித்து மார்க் வாரன் கூறியதாவது: அமெரிக்காவின் அலாஸ்கா மாகாண தீயணைப்பு படையில் பணியாற்றி ஓய்வு பெற்றேன். ரஷ்ய தயாரிப்பான யூரல் பைக்கின் தீவிர ரசிகனான நான், பழைய யூரல் பைக்கை வாங்கி ஓட்டி வந்தேன்.

அதிபர் புதினின் வருகைக்காக ரஷ்ய ஊடகங்களின் செய்தியாளர்கள், ஆங்கரேஜ் நகரில் முகாமிட்டிருந்தனர். யூரல் பைக்கில் சென்ற என்னிடம் அவர்கள் பேட்டி எடுத்தனர். அப்போது யூரல் பைக்கின் உதிரி பாகங்கள் கிடைப்பதில் சிரமம் இருப்பதாக ரஷ்ய செய்தியாளர்களிடம் தெரிவித்தேன்.

என்னுடைய பேட்டி ரஷ்ய அதிபர் புதினின் கவனத்துக்கு சென்றிருக்கிறது. அவர் எனக்கு புதிய யூரல் பைக்கை பரிசாக வழங்கி உள்ளார். சில நாட்களுக்கு முன்பு ஆங்கரேஜ் நகரில் ரஷ்ய அதிகாரிகள், என்னிடம் புதிய யூரல் பைக்கை வழங்கினர். அதற்காக ஒரு பைசாவை கூட பெற வில்லை. இது எனக்கு இன்ப அதிர்ச்சியாக இருக்கிறது. இவ்வாறு மார்க் வாரன் தெரிவித்தார்.

# ஆன்லைன் கேமிங் மசோதாவால் ரூ.4,500 கோடி வருவாய் இழப்பு

**டெல்லி, ஆக. 23-**

ஆன்லைன் கேமிங் மசோதாவால் ரூ.4,500 கோடி வரை இழப்பு தகவல் வெளியாகியுள்ளது.

சூதாட்டம் மற்றும் பணம் வைத்து விளையாடும் ஆன்லைன் கேம்களை தடை செய்யும் புதிய கேமிங் மசோதாவை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இந்த மசோதா மக்களவை மற்றும் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.

அதில் இதுபோன்ற விளையாட்டுகளை விளம்பரப்படுத்தும் தளங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த மசோதா சட்டமானால் பெரு நிறுவனங்கள் பல அடி வாங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கிரிக்கெட் பெட்டிங் கம்பெனிகள்.

இந்நிலையில் பணம் கட்டி விளையாடும் ஆன்லைன் கேமிங்கிற்கு தடை விதிக்கப்பட்டால், இந்தியாவின் விளம்பரத் துறைக்கு ஆண்டுக்கு ரூ.4,500 கோடி வரை இழப்பு ஏற்படலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதாவது, இந்த விளம்பரங்களின் மூலம் ஆண்டுக்கு ரூ.4,500 கோடி வருவாய் உருவான நிலையில் அது முற்றிலும் முடங்குகிறது.

டிவி சேனல்கள், ஓ.டி.டி. தளங்கள், யூடியூப் சேனல்கள் போன்றவை கணிசமான விளம்பர வருவாயை இழக்கும் எனக் கூறப்படுகிறது. ஏற்கனவே டிராம் 11 மற்றும் எம்.பி.எல். ஆகிய நிறுவனங்கள் தங்கள் தளத்தில் நிஜ பணம் வைத்து விளையாடும் ஆட்டங்களை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

# விசாக்கள் மீது டிரம்ப் அரசு எடுத்த அதிரடி முடிவு - நாடு கடத்தல் அபாயம்

**அமெரிக்கா, ஆக. 23-**

5.5 கோடி வெளிநாட்டினரின் விசாக்களை மதிப்பாய்வு செய்து வருவதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அறிவித்துள்ளது.

இந்த மதிப்பாய்வில் யாராவது விசா விதிகளை மீறியது கண்டறியப்பட்டால், அவர்களின் விசா உடனடியாக ரத்து செய்யப்படும் என்றும், அவர்கள் அமெரிக்காவில் இருந்தால், அவர்களை நாட்டிலிருந்து நாடு கடத்தும் செயல்முறை தொடங்கப்படும் என்றும் வெளியுறவுத்துறை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது


அனைத்து விசா வைத்திருப்பவர்களின் பதிவுகளும் உன்னிப்பாக சரிபார்க்கப்படும். விசா வழங்கப்பட்ட பிறகு அவர்களின் நடத்தையில் ஏதேனும் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா? அவர்கள் விதிகளுக்கு மாறாக நடந்து கொள்கிறார்களா? விசா காலாவதியான பிறகு நாட்டில் தங்குவது, குற்றச் செயல்களில் ஈடுபடுவது, பொது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பது, பயங்கரவாத நடவடிக்கைகளில் பங்கேற்பது அல்லது பயங்கரவாத அமைப்புகளை ஆதரிப்பது போன்ற பிரச்சினைகளை அதிகாரிகள் ஆராய்வார்கள்.

இதற்காக, விசா வைத்திருப்பவர்களின் சமூக ஊடக கணக்குகள், அவர்களின் சொந்த நாடுகளில் சட்ட அமலாக்க நிறுவனங்கள் வைத்திருக்கும் பதிவுகள் மற்றும் அமெரிக்காவில் அவர்களின் நடத்தை தொடர்பான அனைத்து விவரங்களும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என்று வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. இது புதிய விசாவிற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டுமல்ல, ஏற்கனவே விசா உள்ள அனைவருக்கும் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இரண்டு மடங்குக்கும் அதிகமான விசாக்களை, குறிப்பாக மாணவர் விசாக்களை நான்கு மடங்கு அதிகமாக ரத்து செய்துள்ளதாக வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

டிரம்ப் பதவியேற்றதிலிருந்து 6,000க்கும் மேற்பட்ட மாணவர் விசாக்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**23-08-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** குழந்தைகளின் மகிழ்ச்சியால் மனம் மகிழும். அழகிய மனைவி அமைவாள். கல்வியில் தடைகள் ஏற்படலாம். நல்ல ஆலோசகராக விளங்குவீர்கள். திடமான முடிவுகளை எடுப்பீர்கள்.

**ரிஷபம்:-** சுகக் குறைவு, பெண்களால் பேரிழப்பு ஆகியவை ஏற்படலாம். தாயின் உடல் நிலையில் அக்கறை தேவை. பெரியோரையும், அதிகாரிகளையும் மதித்து நடப்பது நல்லது.

**மிதுனம்:-** அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். செல்வ நிலை உயரும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படலாம். புதிய உற்சாகம் பிறக்கும்.

**கடகம்:-** மனைவி, மக்களுக்கு சுகக் குறைவு ஏற்படலாம். கல்வியில் வெற்றி பெறக் கடின உழைப்பு தேவை. வீட்டில் உள்ள குழப்பங்களால் மன அமைதி குறையும்.

**சிம்மம்:-** மனதுக்கு முழுத் திருப்தி அளிக்கும் வகையில் பொருளாதார முன்னேற்றம் இருக்கும். பொதுச் சேவையில் நாட்டம் செல்லும். மனதுக்குப் பிடித்த படியான வாகனம் வாங்குவார்.

**கன்னி:-** பணியின் காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். முன் கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும். குறிக்கோளற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**துலாம்:-** கல்வியில் உங்கள் திறமைகளைக் காட்டி வெற்றி பெறுவீர்கள். அனைவராலும் மதிக்கப்படுவீர்கள். இனிய பேச்சுக்களால் பெண்கள் மூலம் லாபம் அடைவீர்கள்.

**விருச்சிகம்:-** சுமாரான நாள். குடும்பத்தாரிடம் வாக்குவாதத்தைத் தவிருங்கள். தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமல் வெற்றிக்கான படியில் ஏறுங்கள். உடல் சோர்வு ஏற்படலாம்.

**தனுசு:-** உங்கள் தெய்வ நம்பிக்கை ஓங்கும். பயணத்தில் ஆர்வம் ஏற்படும். ஆரோக்கியம் மற்றும் பணிகள் மேம்படும், பதவி உயர்வு ஏற்படலாம். பல வழிகளில் பணம் வரும்.

**மகரம்:-** பலவகைகளிலும் பண வருமானம் வந்து குவியும். திருமண ஏற்பாடுகள் நடக்கும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். நண்பர்கள் சந்திப்பு நலம் தரும்.

**கும்பம்:-** தொழில் மற்றும் வியாபாரத்தில் ஆதாயம் பெருகும். தனக்கென ஒரு காதலி ஏற்பட்டு உள்ளம் மகிழும் இனிய பயண சுகம் கூடும். பலவகையிலும் பணவரவு அதிகரிக்கும்.

**மீனம்:-** நம்பத் தகுந்த அநேக நண்பர்கள் நட்புக் கிடைக்கும். அரசியல் மற்றும் பொதுச் சேவை மூலம் லாபம் அடைவீர்கள். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

## நாய் அசுத்தம் செய்த உணவு

# 84 மாணவர்களுக்கு ரூ.25 ஆயிரம் வழங்க நீதிமன்றம் உத்தரவு

**பிலாஸ்பூர், ஆக. 23-**

நாய் அசுத்தம் செய்த உணவு சாப்பிட்ட 84 மாணவர்களுக்கு ரூ.25 ஆயிரம் வழங்க சத்தீஸ்கர் நீதிமன்றம் உத்தவரவிட்டது.

நாய் அசுத் தம் செய்த மதிய உணவைச் சாப்பிட்ட 84 மாணவர் களுக்கு தலா ரூ.25 ஆயிரம் வழங்க வேண்டும் என்று சத்தீஸ்கர் மாநில அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. சத்தீஸ்கர் மாநிலம் பலோடாபஜார்-படாப்புரா மாவட்டத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. அப்போது, மதிய உணவுத் திட்ட ஊழியர்கள், நாய் அசுத்தம் செய்த உணவை 84 மாணவர் களுக்கு வழங்கி விட்டதாகத் தெரியவந்துள்ளது.

விவரம் அறிந்த பின்னர் அந்த மாணவர் களுக்கு 3 டோஸ் ரேபீஸ் தடுப்பூசியை செலுத்த மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது. இதனிடையே இந்த விவகாரத்தை அரசின் கவனக்குறைவு என்று கூறி சத்தீஸ்கர் உயர் நீதிமன்றம் தாமாகவே முன்வந்து வழக்கு பதிவு செய்தது. இந்த வழக்கு தலைமை நீதிபதி ரமேஷ் சின்ஹா, நீதிபதி பிபு தத்தா குரு ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த நீதிபதிகள் கூறியதாவது: நாய் அசுத்தம் செய்த உணவைச் சாப்பிட்ட மாணவர்கள் 84 பேருக்கும் அடுத்த ஒரு மாதத்துக்குள் தலா ரூ.25 ஆயிரத்தை சத்தீஸ்கர் மாநில அரசு வழங்கவேண்டும். மதிய உணவு சாப்பிடும் மாணவர்களுக்கு தரமான உணவை வழங்குவதில் இனி மாநில அரசு கண்காணிப்புடன் நடந்துகொள்ளவேண்டும். இவ்வாறு தெரிவித்தனர்.

# தங்கம், வெள்ளி விலை நிலவரம்

**சென்னை, ஆக. 23-**

சென்னையில் நேற்று முன்தினம் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.50 உயர்ந்து ஒரு கிராம் தங்கம் ரூ.9,230க்கும், சவரனுக்கு ரூ.400 உயர்ந்து ஒரு சவரன் தங்கம் ரூ.73,840 க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் இன்று தங்கம் விலை சற்று குறைந்துள்ளது. இதன்படி சென்னையில் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.15 குறைந்து, ஒரு கிராம் தங்கம் ரூ.9,215க்கும், சவரனுக்கு ரூ.120 குறைந்து, ஒரு சவரன் தங்கம் ரூ.73,720 க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.2 உயர்ந்து, ஒரு கிராம் ரூ. 128க்கும். ஒரு கிலோ வெள்ளி 1,28,000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# மோசடி வழக்கில் டிரம்புக்கு விதிக்கப்பட்ட அபராதம் ரத்து: அமெரிக்க உச்சநீதிமன்றம்

**அமெரிக்கா, ஆக. 23-**

மோசடி வழக்கில் டிரம்புக்கு விதிக்கப்பட்ட அபராதம் ரத்து செய்து அமெரிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

டிரம்ப் நிறுவனம் மற்றும் அதன் சொத்துக்களின் மதிப்பை உயர்த்தி காட்டி வங்கிக் கடன்கள் மற்றும் காப்பீட்டு ஒப்பந்தங்களைப் பெற்றதாக நியூயார்க் அட்டர்னி ஜெனரல் லெட்டிடியா ஜேம்ஸ் 2022 இல் மோசடி வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் டிரம்ப் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு கடந்த பிப்ரவரி 2024 இல் அவருக்கு 500 மில்லியன் டாலர் அபராதம்விதிக்கப்பட்டது.

இதற்கிடையே கடந்த வருட இறுதியில் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று டிரம்ப் அமெரிக்க அதிபரானார். இந்நிலையில் அதிபர் டிரம்ப் 500 மில்லியன் டாலர் அபராதம் செலுத்த வேண்டும் என்ற உத்தரவை உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட மேல்முறையீட்டு அதிகாரசபை இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. முந்தைய உத்தரவில் அபராதம் அதிகமாக விதிக்கப்பட்டது என்றும், அமெரிக்க அரசியலமைப்பின் எட்டாவது திருத்தத்தை மீறியது என்றும் நீதிமன்ற உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

நியூயார்க்கில் தனது வணிகத்தை முற்றிலுமாக பாதித்த உத்தரவை ரத்து செய்ய துணிச்சலுடன் செயல்பட்டதற்காக நீதிமன்றத்தை மதிப்பதாக டிரம்ப் தனது எக்ஸ் பக்கத்தில் மன முவந்துள்ளார்.

# பா.ம.க.வில் ராமதாஸ் மகள் ஸ்ரீகாந்திக்கு பதவியா..?

**சென்னை, ஆக. 23-**

பா.ம.க.வில் ராமதாஸ் மகள் ஸ்ரீகாந்திக்கு பதவி வழங்கப்பட்டுள்ளது.

பா.ம.க.வில் தந்தை-மகன் இடையே கருத்து மோதல் நிலவி வருகிறது. தனது மகள் வழிப்பேரரான முகுந்தன் பரசுராமனை இளைஞரணி தலைவராக ராமதாஸ் அறிவித்த நிலையில், அதற்கு அன்புமணி கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தார் . இதன்பின்னர், கூட்டணி விவகாரம், கட்சி செயல்பாடுகளுக்கு முட்டுக்கட்டை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அன்புமணி மீது தொடர்ந்து ராமதாஸ் அதிருப்தி அடைந்தார். இதனை தொடர்ந்து அன்புமணி ஆதரவாளர்களை நீக்கி உத்தரவிட்டார்.

இப்படியாக, கடந்த பொதுக்குழுவில் ஆரம்பித்த மோதல் சமீபத்தில் நடந்த முடிந்த பொதுக்குழு வரை நீடித்தது. இருதரப்பினரும் தனது ஆதரவாளர்களுன் பொதுக்குழு கூட்டினர். சமீபத்தில் ராமதாஸ் கூட்டிய பொதுக்குழுவில் அவரது மகளான ஸ்ரீகாந்தி கலந்து கொண்டார். அவருக்கு மேடையில் ராமதாஸ் அருகிலேயே இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது. இதனை தொடர்ந்து ஸ்ரீகாந்திக்கு கட்சியில் பொறுப்பு வழங்கப்படலாம் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில், ராமதாஸ் தரப்பு ஸ்ரீகாந்திக்கு பா.ம.க. நிர்வாக குழு உறுப்பினர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. 22 பேர் கொண்ட நிர்வாக குழுவில் ஸ்ரீகாந்தியும் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

முன்னதாக, என் குடும்ப பெண்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்று சவுமியாவிடம் சொன்னேன். ஆனால் இப்போது நடப்பது உங்களுக்கு தெரியும். பொதுக்குழுவில் சொன்னதுபோல் குடும்ப பெண்கள் கட்சியில் வேண்டாம் என்று சொன்னேன். என்னிடம் கெஞ்சி, கூத்தாடி, வாதாடி தருமபுரியில் போட்டியிட்டார் சவுமியா. தருமபுரி தொகுதியில் முதலில் தான் நிற்பதாக கூறிய அன்புமணி, பின்னர் சவுமியா நிற்பதாக கூறினார். தனது குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் அரசியலுக்கு வேண்டாம் என்று கூறியதற்கு எதிர்மாறாக அன்புமணி செயல்பட்டதாக ராமதாஸ் குற்றம்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி திரவுபதி முர்முவுடன் விண்வெளி வீரர் சுக்லா சந்திப்பு



டெல்லி, ஆக. 23-

ஜனாதிபதி திரவுபதி முர்முவுடன் விண்வெளி வீரர் சுக்லா சந்தித்து பேசினார்.

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா (வயது 39). இவர் கடந்த ஜூன் 25-ந்தேதி, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்றார். அமெரிக்காவை சேர்ந்த ஆக்சியம் ஸ்பேஸ் என்னும் தனியார் நிறுவனத்தின் 'ஆக்சியம்-4' திட்டத்தின் கீழ் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான பயணத்தில், சுக்லாவுடன் பெக்கி விட்சன், திபோர் கபு மற்றும் ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி-விஸ்னீவ்ஸ்கி ஆகியோரும் இணைந்து கொண்டனர். அவர்கள் 4 பேரும் விண்வெளியில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 18 நாட்கள் வரை தங்கி, பயிர்கள் வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு ஆராய்ச்சி பணிகளில் ஈடுபட்டனர்.

ஆராய்ச்சி பணி நிறைவடைந்ததும், சுபான்ஷு சுக்லா உள்பட 4 விண்வெளி வீரர்களும் கடந்த ஜூலை 15-ந்தேதி பூமிக்கு திரும்பினர்.

இதன் மூலம், 41 ஆண்டுகளில் விண்வெளிக்கு சென்று திரும்பிய முதல் இந்தியர் என்ற பெருமையை சுபான்ஷு சுக்லா பெற்றார்.

இதனிடையே, விண்வெளி சென்று திரும்பிய சுபான்ஷு சுக்லா அமெரிக்காவில் இருந்து கடந்த 17ம் தேதி இந்தியா வந்தார். அவர் கடந்த 18ம் தேதி டெல்லியில் பிரதமர் மோடியை சந்தித்தார். இதையடுத்து, பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங்கை நேற்று முன்தினம் சுபான்ஷு சுக்லா சந்தித்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி திரவுபதி முர்முவை இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா நேற்று சந்தித்தார். டெல்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இதில், விண்வெளி பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து பூமிக்கு திரும்பிய சுபான்ஷு சுக்லாவை ஜனாதிபதி முர்மு வாழ்த்தினார்.

# இனி சிறையிலிருந்து யாரும் ஆட்சி செய்ய முடியாது: பிரதமர் மோடி பேச்சு



பாட்னா, ஆக. 23-

இனி சிறையிலிருந்து யாரும் ஆட்சி செய்ய முடியாது என்று பிரதமர் மோடி மக்களவையில் பேசினார்.

அமைச்சர்கள், மாநில முதல்வர்கள் மற்றும் பிரதமரின் பதவி பறிப்பு மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அது பற்றி விளக்கம் கொடுத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. அது குறித்து அவர் நேற்று பிஹாரில் பேசுகையில், 'ஊழலை ஒழிக்க தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முன்னெடுப்பு இது. இனி சிறையிலிருந்து யாரும் ஆட்சி செய்ய முடியாது.' என்று கூறினார்.

பிஹாரில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இதனையொட்டி, பிரதமர் மோடி 2-வது முறையாக அங்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். திறந்த வெளி வாகனத்தில் ரோடு ஷோ சென்ற பிரதமர் மோடிக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பிரதமருடன் முதல்வர் நிதிஷ் குமார், துணை முதல்வர் சாம்ராட் சவுத்ரியும் இருந்தனர்.

தொடர்ந்து கயாஜியில் நடந்த நிகழ்ச்சியில் ரூ.13,000 கோடி மதிப்பிலான நலத் திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்

இதனையடுத்து பிரதமர் பேசியதாவது: ஓர் அரசு அதிகாரி சிறையில் அடைக்கப்பட்டால். அடுத்த 50 மணி நேரத்தில் அவரது வேலை பறிபோகிறது. ஆனால் ஒரு முதல்வர், அமைச்சர், ஏன் பிரதமர் கூட சிறையில் இருந்து அரசாங்கத்தை நடத்தலாம். சில நாட்களுக்கு முன்னர் நாம் சிறையிலிருந்து அரசு உத்தரவுகள் பறந்ததைப் பார்த்தோம். தலைவர்களுக்கு இதுபோன்ற மனப்பாண்மை இருந்தால், நாம் ஊழலை எப்படி ஒழிப்பது. அதனால் தான் நாம் ஊழலுக்கு எதிரான இந்த புதிய சட்டத்தை கொண்டு வர முயற்சிக்கிறோம். அந்த வரம்புக்குள் பிரதமரும் வருகிறார்.

ஊழல் வழக்கில் சிறைக்குச் செல்லும் அரசியல்வாதிகள்தான் தங்களது பதவிகளை இழக்க வேண்டும். எனவே இந்த மசோதாவுக்கு ஊழல் அரசியல்வாதிகளே எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் இந்த மசோதாவை காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தளம் , இடதுசாரிகள் எதிர்க்கின்றன. இவ்வாறு பிரதமர் கூறினார்.

ஊழல் அல்லது கடுமையான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி தொடர்ந்து 30 நாட்கள் சிறைக்காவலில் வைக்கப்பட்டால் ஓர் அமைச்சரோ, ஒரு மாநில முதல்வரோ, ஏன் நாட்டின் பிரதமரோ பதவி பறிப்புக்கு உள்ளாக வழிவகை செய்யும் சட்ட மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முதல்நாள் இந்தக் கூட்டத்தொடர் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில், அது பற்றி விளக்கம் கொடுத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி.

மக்கள் வெறும் வாக்கு வங்கி அல்ல - பதவி பறிப்பு மசோதாவைத் தாண்டி பேசிய பிரதமர், "பிஹார் எனும் புனித பூமியில் எடுக்கப்பட்ட எந்தத் தீர்மானமும் வீண் போகாது. பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் நடந்தபோது பயங்கரவாதிகளை இந்த மண்ணில் இருந்து தூள் தூளாக்குவேன் என்று சபதம் செய்தேன். அந்த வாக்குறுதி நிறைவேற்றுப்பட்டது

ஆனால், பிஹார் மக்களை ராஷ்டிரிய ஜனதா தளம் தங்கள் வாக்கு வங்கியாக மட்டுமே பார்க்கிறது. அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்காக எதுவும் செய்யவில்லை. அவர்களின் ஆட்சி காலத்தில் கயா போன்ற நகரங்கள் இருளில் மூழ்கி இருந்தன. கல்வி, வேலைவாய்ப்பு இல்லாமல் பல தலைமுறைகள் இடம் பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது." என்று எதிர்க்கட்சிகளை கடுமையாக விமர்சித்தார்.

# 3 நாட்கள் தொடர் பிரசாரம்: எடப்பாடி பழனிசாமி இன்று திருச்சி வருகை

திருச்சி, ஆக. 23-

3 நாட்கள் தொடர் பிரசாரத்திற் எடப்பாடி பழனிசாமி இன்று திருச்சி வருகிறார்.

2026 தமிழக சட்டமன்றத் தேர்தலையொட்டி அ.தி.மு.க. பொதுச்செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி 'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற எழுச்சி பயணத்தை கடந்த மாதம் 7-ம் தேதி கோவை மேட்டுப்பாளையத்தில் தொடங்கினார்.

பின்னர் பல்வேறு மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சட்டமன்றத் தொகுதி வாரியாக மக்களை சந்தித்து வருகிறார். அதன் ஒரு பகுதியாக திருச்சி மாவட்டத்தில் இன்று (சனிக்கிழமை), நாளை (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 25-ந் தேதி (திங்கட்கிழமை) ஆகிய மூன்று நாட்கள் பிரசாரம் செய்ய உள்ளார்.

இன்று திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவெறும்பூர் பேருந்து நிலையம் அருகே மாலை 4 மணிக்கு திறந்த வேனில் பிரசாரம் மேற்கொள்கிறார்.

பின்னர் திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதியில் காந்தி மார்க்கெட் மரக்கடை பகுதியில் மாலை 5.30 மணிக்கும், லால்குடி சட்டமன்ற தொகுதியில் லால்குடியில் இரவு 7:00 மணிக்கும் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்கிறார்.

நாளை மணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மணச்சநல்லூர் கடை வீதியில் மாலை 4:00 மணிக்கும், துறையூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட துறையூர் பேருந்து நிலையம் அருகாமையில் மாலை 5.30 மணிக்கும்,

முசிறி சட்டமன்ற தொகுதியில் முசிறி கைகாட்டி அருகாமையில் இரவு 7 மணிக்கும் பிரசாரம் மேற்கொள்கிறார். அதன் தொடர்ச்சியாக வருகிற 25-ந் தேதி திங்கட்கிழமை மணப்பாறையில் மாலை 4 மணிக்கும், திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருச்சி புத்தூர் நான்கு ரோட்டில் மாலை 5.30 மணிக்கும், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில் ராஜகோபுரம் முன்பு இரவு 7 மணிக்கும் அவர் பிரசாரம் செய்ய உள்ளார். எடப்பாடி பழனிசாமி வருகையை முன்னிட்டு திருச்சி விழாக்கோலம் பூண்டுள்ளது. அவரை வரவேற்று அ.தி.மு.க. நிர்வாகிகள் தொண்டர்கள் பிரமாண்ட பிளக்ஸ் பேனர்கள் மற்றும் அலங்காரவளைவுகள் கொடி தோரணங்கள் கட்டி வருகின்றனர்.

இந்த மூன்று நாட்கள் சுற்றுப்பயணத்தின் போது கட்சி நிர்வாகிகள் மட்டுமல்லாமல் விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர் உள்ளிட்ட பல்வேறு அமைப்பு சார்ந்த பிரதிநிதிகளை சந்தித்து உரையாட உள்ளார்.

எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்யும் 9 இடங்களிலும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கும் வகையில் திருச்சி புறநகர் தெற்கு மாவட்ட செயலாளர் ப.குமார், வடக்கு மாவட்ட செயலாளர் மு. பரஞ்ஜோதி, மாநகர மாவட்ட செயலாளர் ஜெ.சீனிவாசன் தலைமையில் அ.தி.மு.க. நிர்வாகிகள் சிறப்பான ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

முன்னதாக இன்று பிற்பகல் திருச்சி வருகை தரும் எடப்பாடி பழனிசாமி திருச்சி மத்திய பஸ் நிலையம் அருகாமையில் உள்ள தனியார் தங்கும் விடுதியில் ஓய்வெடுக்கிறார்

மூன்று நாட்களும் அதே விடுதியில் தங்கி இருந்து சுற்றுப்பயணத்தை மேற்கொள்கிறார்.

# சென்னை வெறும் ஊரல்ல தமிழ்நாட்டின் இதயத்துடிப்பு - முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஆக. 23-

சென்னை வெறும் ஊரல்ல தமிழ்நாட்டின் இதயத்துடிப்பு என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

சென்னை தினம் கொண்டாடப்படுகிறது. இந்நிலையில், சென்னை நகரின் சிறப்பை போற்றும் வகையில் எக்ஸ் சமூக வலைதளத்தில் முதல்வர் ஸ்டாலின் ட்வீட் செய்துள்ளார்.

"எந்தெந்த மூலைகளில் இருந்தோ நண்பர்களை அளித்து, வாழ வழிதேடுவோருக்கு நம்பிக்கையை அளித்து, பல பெண்களுக்குப் பறக்கச் சிறகுகளை அளித்து, எத்தனையோ பேருக்கு முதல் சம்பளத்தை அளித்து, சொந்த ஊரில் அடையாளத்தை அளித்து, மொத்தத்தில் நமக்கெல்லாம் வாழ்வளித்த சீரிளம் சென்னைக்கு அகவை 386. சென்னை வெறும் ஊரல்ல; தமிழ்நாட்டின் இதயத்துடிப்பு! வணக்கம் வாழவைக்கும் சென்னை!" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# தனி ஆள் இல்ல கடல் நான் செல்பி வீடியோவை வெளியிட்ட விஜய்



மதுரை, ஆக. 23-

2026 சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் முழுவீச்சில் தயாராகி வருகிறது. அக்கட்சியின் முதல் மாநாடு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே கடந்த ஆண்டு நடந்தது. அதைத் தொடர்ந்து மதுரையில் த.வெ.க. 2-வது மாநில மாநாடு நேற்று முன்தினம் பிரமாண்டமாக நடைபெற்றது.

இந்த மாநாட்டில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து லட்சக்கணக்கான த.வெ.க. தொண்டர்கள் வருகை தந்தனர். மாநாட்டில் பேசிய விஜய், த.வெ.க.வின் கூட்டணி நிலைப்பாடு, கொள்கை எதிரி, அரசியல் எதிரி, கட்சியின் திட்டம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து உரையாற்றினார். மேலும் மதுரை மாநாட்டில் 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

முன்னதாக மாநாடு தொடங்குவதற்கு முன், மாநாட்டு திடலில் அமைக்கப்பட்டிருந்த 300 அடி நீள ரேம்ப் மீது நடந்து சென்று தொண்டர்களின் உற்சாக வரவேற்பை விஜய் ஏற்றுக்கொண்டார். அப்போது ரேம்ப் மீது ஏறி விஜய்யை நெருங்க முயன்ற சில தொண்டர்களை பவுன்சர்கள் தடுத்து நிறுத்தினர். தொண்டர்கள் வீசிய கொடிகளை பிடித்து விஜய் தனது கழுத்தில் அணிந்து கொண்டார்.

இந்த நிலையில், மாநாட்டில் ரசிகர்களுடன் எடுத்த செல்பி வீடியோவை விஜய் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அந்த பதிவில், "உங்க விஜய் உங்க விஜய், உயிரென வர்றேன் நான்.

உங்க விஜய் உங்க விஜய், எளியவன் குரல் நான். உங்க விஜய் உங்க விஜய், தனி ஆள் இல்ல கடல் நான்" என்ற வரிகளை விஜய் பதிவிட்டுள்ளார். இந்த வரிகள் நேற்று முன்தினம் த.வெ.க. மாநாட்டில் வெளியிடப்பட்ட கட்சி பாடலில் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவு



சேலம், ஆக. 23-

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்து உள்ளது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து இந்தாண்டில் 5-வது முறையாக நிரம்பியது. இதையடுத்து அணையில் இருந்து உபரிநீர் 16 கண் மதகு வழியாக திறக்கப்பட்டது. அதிகபட்சமாக சுமார் 90 ஆயிரம் கனஅடி வரை திறக்கப்பட்டதால் காவிரிஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 11 மாவட்டங்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நேற்று முன்தினம் காலை முதல் வினாடிக்கு 56 ஆயிரத்து 997 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதையடுத்து அணையில் இருந்து நேற்று முன்தினம் காலை 10 மணி முதல் 16 கண் மதகு வழியாக திறந்து விடப்பட்ட தண்ணீர் வினாடிக்கு 30 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. மேலும் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு 750 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், மேட்டூர் அணைக்கு நீர் வரத்து, இன்று காலை நிலவரப்படி 30,850 கன அடியாக குறைந்துள்ளது. டெல்டா பாசனத்திற்கு அணையில் இருந்து 30,000 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் நீர் மட்டம் 120 அடியாகவும் நீர் இருப்பு 93.470 டி.எம்.சி.ஆகவும் உள்ளது.

# விநாயகர் சதுர்த்தி: நெல்லை - மைசூரு இடையே சிறப்பு ரயில் - தெற்கு ரயில்வே அறிவிப்பு

சென்னை, ஆக. 23-

விநாயகர் சதுர்த்தியை முன்னிடடு நெல்லை - மைசூருக்கு இடையே சிறப்பு ரயிலை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

விநாயகர் சதுர்த்தியையொட்டி நெல்லை - மைசூரு இடையே சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. மைசூருவில் இருந்து வரும் 26-ந் தேதி (செவ்வாய்கிழமை) இரவு 8.15 மணிக்கு இயக்கப்படும் சிறப்பு ரெயில் (வண்டி எண் 06241) மறுநாள் காலை 10.50 மணிக்கு நெல்லையை வந்தடையும்.

மறுமார்க்கத்தில், நெல்லையில் இருந்து 27-ந் தேதி (புதன் கிழமை) மதியம் 3.40 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06242) மறுநாள் காலை 5.50 மணிக்கு மைசூருவை சென்றடைகிறது. இந்த சிறப்பு ரெயில் கோவில்பட்டி, சாத்தூர், விருதுநகர், மதுரை, திண்டுக்கல், கரூர், நாமக்கல், சேலம், பெங்களூரு வழியாக இயக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 818 சாலை ஆய்வாளர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பெரியசாமி, ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பா. பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நெல்லையில் பா.ஜ.க. பூத் கமிட்டி மண்டல மாநாடு: அமித்ஷா பங்கேற்பு

திருநெல்வேலி, ஆக. 23-

நெல்லையில் பா.ஜ.க. பூத் கமிட்டி மண்டல மாநாட்டில் கலந்து கொள்ள அமித் ஷா பங்கேற்றார்.

திருநெல்வேலியல் நேற்று நடைபெறும் பா.ஜ.க. பூத் கமிட்டி மண்டல மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பங்கேற்றுப் பேசுகிறார். பா.ஜ.க. சார்பில் பூத் கமிட்டி மண்டல மாநாடு தமிழகம் முழுவதும் 7 இடங்களில் நடைபெற உள்ளது. முதல் மாநாடு நெல்லையில்இன்று நடைபெறுகிறது. வண்ணார்பேட்டை சத்திரம் புதுக்குளம் பகுதியில் உள்ள ரயில்வே மேம்பாலம் அருகே நடைபெறும் இந்த மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய அமைச்சர் எல்.முருகன், கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர்கள் அண்ணாமலை, தமிழிசை சவுந்தரராஜன், பொன்.ராதாகிருஷ்ணன், ஹெச்.ராஜா, தேசிய பொதுச் செயலாளர் பி.எல்.சந்தோஷ், தேசிய மகளிரணித் தலைவர் வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய 5 மக்களவை தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பூத் கமிட்டி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். மாநாட்டில் பங்கேற்பதற்காக மத்திய அமைச்சர் அமித் ஷா கேரள மாநிலம் கொச்சியில் இருந்து விமானம் மூலம் இன்று மதியம் 2.50 மணிக்கு தூத்துக்குடி வருகிறார்.

அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் 3.10 மணிக்கு பாளையங்கோட்டை ஆயுதப்படை மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிபேடு தளத்துக்கு வந்து இறங்குகிறார். அங்கிருந்து 3.25 மணிக்கு மாநாட்டு மேடை க்கு காரில் செல்கிறார். மாநாடு முடிந்ததும் ஹெலிகாப்டரில் மீண்டும் தூத்துக்குடி சென்று, அங்கிருந்து விமானம் மூலம் டெல்லிக்கு செல்கிறார். அமித் ஷா வருகையையொட்டி 2 ஆயிரம் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# முதல்வரை விமர்சித்த விஜய்யின் தராதரம் அவ்வளவு தான் - அமைச்சர் காட்டம்

திருச்சி, ஆக. 23-

முதல்வரை விமர்சித்த விஜய்யின் தராதரம் அவ்வளவு தான் என அமைச்சர் கே. என் நேரு காட்டமாக பேசினார்.

2026 சட்டமன்ற தேர்தல் தான் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் சந்திக்கும் முதல் தேர்தல் ஆகும். எனவே முதல் தேர்தலிலேயே முத்திரை பதிக்க அக்கட்சி தீவிர முயற்சி எடுத்து வருகிறது. அக்கட்சியின் முதல் மாநாடு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே கடந்த ஆண்டு நடந்தது. இந்த சூழலில் 2-வது மாநில மாநாடு நேற்று முன்தினம் மதுரையில் பிரமாண்டமாக நடைபெற்றது. இந்த மாநாட்டில் தமிழ்நாடு முழுவதும் இருந்து லட்சக்கணக்கான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

அந்த மாநாட்டில் திமுக குறித்து பேசிய விஜய், கடந்த 4 ஆண்டுகளில் துறை சார்ந்த ஊழல்கள், மக்கள் பிரச்சினைகள் குறித்து கேள்விகளை அடுக்கினார். மேலும் திமுக கொடுத்த வாக்குறுதிகள் அனைத்து நிறைவேற்றப்பட்டதா? என்று கேள்வி எழுப்பி அதற்கு மக்கள் இல்லை என்று அளித்த பதில் உங்களுக்கு கேட்கிறதா 'அங்கிள் ஸ்டாலின்' என்று அரங்கம் அதிர விஜய் பேசினார். இதற்கு கலவையான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை அங்கிள் என்று தவெக தலைவர் விஜய் விமர்சனம் செய்தது குறித்து அமைச்சர் கே.என்.நேருவிடம் திருச்சியில் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த அமைச்சர் கே.என்.நேரு, "அவரது தராதரம் அவ்வளவு தான். ஒரு மாநிலத்தின் முதல்-அமைச்சர், பெரிய கட்சி தலைவர், 40 ஆண்டு காலம் அரசியலில் இருக்கிறார். நேற்று முன்தினம் அரசியலுக்கு வந்துவிட்டு அவரை அப்படி சொல்வது தரம் தாழ்ந்த செயல். மக்கள் நல்ல பதில் சொல்வார்கள். நாங்களும் தேர்தலில் நல்ல பதில் சொல்வோம். அதில் ஒன்றும் மாற்றமில்லை. 10 பேர், 50 பேர் கூடிவிட்டார்கள் என்பதற்காக மாநில முதல்-அமைச்சரை எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்பது எவ்வாறு சரியாக இருக்கும்?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

# வெளிமாநில தமிழ்ச் சங்கங்களுக்கு தமிழ்நாடு அரசு பாடநூல்கள் தொடர்ந்து இலவசம்



புதுடெல்லி, ஆக. 23-

வெளிமாநில தமிழ்ச் சங்கங்களுக்கு தமிழ்நாடு அரசு பாடநூல்கள் தொடர்ந்து இலவசம் என்று அறிவிப்பு.

இந்து தமிழ் திசை' நாளேட்டில் செய்தி வெளியானதை தொடர்ந்து வெளிமாநில தமிழ்ச் சங்க பள்ளிகளுக்கு பாடநூல் களை தொடர்ந்து இலவசமாக அளிக்க தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. நாட்டின் பிற மாநிலங்களின் முக்கிய நகரங்களில் தமிழ்ச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த சங்கங்களாலும் தமிழ் கல்வி அமைப்புகளாலும் நடத்தப்படும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வி மற்றும் தமிழ் பாடப்பிரிவுக்கு நூல்கள் தேவைப்படுகின்றன. இவை நீண்ட வருடங்களாக தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில் இலவசமாக வழங்கப்பட்டு வந்தன. இந்த இலவச விநியோத்தை நடப்பு வருடம் முதல் தமிழ்நாடு அரசு ரத்து செய்திருந்தது. இது தொடர்பான செய்தி கடந்த 11-ம் தேதி 'இந்து தமிழ் திசை' நாளேட்டில் வெளியானது. இலவச விநியோகம் ரத்து செய்யப்பட்டதற்கு பரவலாக கண்டனம் எழுந்தது. இதன் தாக்கமாக, தற்போது தமிழ்நாடு அரசு தனது முடிவை மாற்றி இலவசப் பாடநூல் விநியோகத்தை தொடர முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து 'இந்து தமிழ் திசை' நாளேட்டிடம் டெல்லியின் தமிழ் நாடு அரசு இல்ல அதிகாரிகள் வட்டாரம் கூறும்போது, "நிதிப் பற்றக்குறை காரணமாக தமிழ்நாடு பாடநூல் இலவச விநியோகம் ரத்து செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பான செய்தி இந்து தமிழ் திசை நாளேட்டில் வெளியாகி முதல்வர் ஸ்டாலின் கவனத்தைப் பெற்றது. இதனால், உடனடியாக ரத்து உத்தரவை மாற்றி மீண்டும் பாடநூல்கள் இலவசமாக வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு ஆகஸ்ட் 18-ம் தேதி பிறப்பித்துள்ளது. இது தொடர்பான தகவல் அனைத்து தமிழ்ச் சங்கங்களுக்கும் கடிதம் மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது" என்று தெரிவித்தனர். இந்த நூல்களை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சென்னை வட்டார அலுவலகம் மற்றும் அடையாறு கிடங்கில் பெற்றுக் கொள்ளுமாறும் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நூல்களை பிற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான செலவு சுமார் ரூ.1 லட்சம் வரை ஆகிறது.

இதையும் தமிழ்நாடு அரசே தனது செலவில் அனுப்பி வைத்தால் நல்லது என்ற கோரிக்கையும் வெளி மாநில சங்கங்கள் தரப்பில் உள்ளது. வெளி மாநிலங்களுக்கான இந்த பாடநூல்களின் மதிப்பு சுமார் ரூ.1 கோடி ஆகும்.

மரம்
மனிதனின்
உரம்

# திருச்சி மாவட்டத்தில் உள்ள பொது நிறுவனங்கள் மற்றும் அரசுத்துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வுக்கூட்டம்

## பொது நிறுவனங்கள் குழு தலைவர் ஏ.பி.நந்தகுமார் தலைமையில் நடந்தது



**திருச்சி,ஆக.23-**
தி ருச் சி ராப் பள்ளி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பொது நிறுவனங்கள் மற்றும் அரசுத்துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் மற்றும் குழு உறுப்பினர்களான ஜி.அன்பழகன் (கும்பகோணம்), உடுமலை கே.ராதாகிருஷ்ணன் (உடுமலைபேட்டை), கடம்பூர் ராஜு (கோவில்பட்டி), மு.பெ.கிரி (செங்கம்) துரை.சந்திரசேகரன் (திருவையாறு), ம.சிந்தனை செல்வன் (காட்டுமன்னார் கோவில்), வி.பி.நாகைமாலி (கீழ்வேளூர்), ஒய்.பிரகாஷ் (ஓசூர்), டாக்டர் சி.விஜயபாஸ்கர் (விராலிமலை), சட்டப்பேரவை செயலாளர் சீனிவாசன் ஆகியோர் கலெக்டர் வே.சரவணன் முன்னிலையில்ஆய்வு மேற்கொண்டனர்.

அதன்படி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட இராஜா காலனியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் சார்பில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு அனைத்து அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் மாணவியர் விடுதி கட்டிடத்தின் கட்டுமான பணிகளின் தற்போதை நிலை குறித்தும் கேட்டறிந்து, விரைவாக பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தினர். மேலும், திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூரில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறையின் சார்பில் புதிதாக கட்டப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மின்தூக்கி, நகரும் படிகட்டுகள் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகள், கண்காணிப்பு கேமராக்களின் கட்டுப்பாட்டு அறை செயல்பாடுகளையும், பேருந்து போக்குவரத்து சேவைகள் குறித்தும் கேட்டறிந்து பொதுமக்களுடன் கலந்துரையாடினர். தொடர்ந்து, பஞ்சப்பூரில் அமைக்கப்பட்டுள்ள நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை நேரில் பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி ஆட்சியரகத்தில் நடைபெற்ற பணி ஆய்வுக் கூட்டத்தில் தாட்கோ, மாவட்ட தொழில் மையம், மாவட்ட முன்னோடி வங்கி, தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மாசு கட்டுப்பாட்டு வாரியம், தொழிலாளர் நலத்துறை, பேரூராட்சிகள், நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மீன்வளத்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு, இத்துறைகளின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் பொதுமக்களுக்கு சென்றடைவது குறித்தும் ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் சமூக பொருளாதார தொழில் முனைவு திட்டத்தின்கீழ் 3 நபர்களுக்கு 50 சதவீதம் மானியத்துடன் கடனுதவிகளும், நன்னிலம் மகளிர் நில உரிமைத்திட்டத்தின்கீழ் ஒரு நபருக்கு மானியத்துடன் கூடிய கடனுதவியும் என மொத்தம் 4 நபர்களுக்கு ரூ.15.32 இலட்சம் மதிப்பீட்டிலான மானியத்துடன் கூடிய கடனுதவிகளை பயனாளிகளுக்கு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் மற்றும் குழு உறுப்பினர்கள் வழங்கினார்கள்.

இந்த ஆய்வின்போது மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், , மாவட்ட கண்காணிப்பாளர் செல்வநாகரத்தினம், குழு அலுவலர் ம.செந்தில்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ர.ராஜலெட்சுமி , மாவட்ட ஊரக வளர;ச்சி முகமை திட்ட இயக்குநர் எஸ்.கங்காதாரிணி, நகரப் பொறியாளர் சிவபாதம், உள்ளிட்ட அரசுத்துறை உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் 6 இடங்களில் நடைபெற உள்ளது

## கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தகவல்

**தஞ்சாவூர்,ஆக.23-**
தமிழ்நாடு முதலமைச்சர் (15.07.2025) அன்று கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் தமிழ்நாட்டிலுள்ள கடைகோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் , மக்களின் குறைகளை வீட்டிற்கே சென்று கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ், முதல் நவம்பர் 2025 வரை மாநிலம் முழுவதும் 10,000 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தார்.

அதன்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் ஜீலை 15 முதல் நவம்பர் 15 வரை 4 கட்டங்களாக 353 முகாம்கள் நடைபெற உள்ளன. இரண்டாம் கட்டமாக நகர்புறங்களில் 37 முகாம்கள் கிராம புறங்களில் 59 முகாம்கள் ஆகிய மொத்தம் 96 முகாம்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆகஸ்ட் 19 முதல் செப்டம்பர் 12 வரை நடைபெறவுள்ளது. இம்முகாம்கள் நகர்ப்புறங்களில் 13 துறைகள் மூலம் 43 சேவைகளும் கிராமப்புறங்களில் 15 துறைகள் மூலம் 46 சேவைகளுக்கான மனுக்கள் பெற்று 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

அதன்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெறும் நேரம் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை 23.08.2025 அன்று உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற உள்ளது. தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு 43, 44, 45 ஆகிய பகுதிகளில் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி சாலை, செல்வம் நகர், ஐஸ்வர்யா மஹாலிலும், பட்டுக்கோட்டை நகராட்சி வார்டு 18, 19 ஆகிய பகுதிகளில் பட்டுக்கோட்டை இசபெல் பள்ளி சாலை, மங்கள மாதா திருமண மஹாலிலும், திருவையாறு வட்டாரம் வானரங்குடி, தில்லைஸ்தானம், மகாராஜபுரம், கடுவெளி, மருவூர், சாத்தனூர், வடுககுடி ஆகிய பகுதிகளில் மருவூர் கிராம சேவை மையத்திலும், திருவோணம் வட்டாரம் வெங்கரை, பாதிரங்கோட்டை வடக்கு, பாதிரங்கோட்டை தெற்கு, அதம்பை, காயாவூர் ஆகிய பகுதிகளில் வடக்கு பாதிரங்கோட்டை சமுதாயக் கூடத்திலும், திருப்பனந்தாள் வட்டாரம் அணைக்கரை, மேலக்காட்டுர், முள்ளங்குடி, திட்டச்சேரி ஆகிய பகுதிகளில் அணைக்கரை செந்தில் ஆண்டவர் திருமண மண்டபத்திலும், பாபநாசம் வட்டாரம் மணலூர், உம்பளப்பாடி, வீரமாங்குடி ஆகிய பகுதிகளில் வீரமாங்குடி மந்தை, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி அருகிலும் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற உள்ளது. எனவே, இம்முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தெரிவித்துள்ளார்.

# மணமேல்குடி ஊராட்சியில் பிளாஸ்டிக் ஒழிப்பு மற்றும் மஞ்சப்பை விழிப்புணர்வு பேரணி




**புதுக்கோட்டை,ஆக.23-**
புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம் மணமேல்குடி ஊராட்சியில் பிளாஸ்டிக் ஒழிப்பு மற்றும் மஞ்சப்பை விழிப்புணர்வு குறித்த பேரணி ஊராட்சி அலுவலகத்தில் இருந்து பேருந்து நிலையம் வரை A.வீரையன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) S.கருணாகரன் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஆகியோர் தலைமையில் வட்டாட்சியர் ரா.பன்னீர்செல்வம் மாவட்ட சுகாதார ஒருங்கிணைப்பாளர் ஜே.ராஜேஸ் முன்னிலையில் நடைபெற்றது.

பேருந்து நிலையம் அருகில் அதிக அளவில் தேங்கி உள்ள பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்தெடுத்து சுத்தம் செய்யும் பணி நடைபெற்றது.

பேரணி துவங்கும் முன் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது

.தொடர்ந்து நெகிழிப்பை தவிர்த்து மஞ்சப்பை விழிப்புணர்வு குறித்து ஊராட்சியில் உள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் கடைகளில் மஞ்சப்பை கொடுத்து பிரச்சாரம் செய்யப்பட்டது. முன்னதாக தூய்மை காவலர்களுக்கான சீருடைகள் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் வழங்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தில் மணமேல்குடி வட்டார நில அளவையர் பழனி முருகன் ஊர்வசி மற்றும் ஊராட்சி செயலர் ஆனந்த் மற்றும் சமூக ஆர்வலர்கள் தூய்மை காவலர்கள் துப்புரவு பணியாளர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர் .

# புதுக்கோட்டை மாவட்டத்தில் சித்தன்னவாசல் சுற்றுலாப் பூங்காவிற்கு ரூ.3.90 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்தும் பணி

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி , சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டினர்



**புதுக்கோட்டை,ஆக.23-**
புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், சித்தன்னவாசலில் சுற்றுலாத்துறையின் சார்பில் ரூ.3.90 கோடி மதிப்பீட்டில் சித்தன்னவாசல் சுற்றுலாத்தலமாக மேம்படுத்துதல் பணிகளுக்கு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், கலெக்டர் மு.அருணா, தலைமையில் அடிக்கல் நாட்டினார்கள்.

பின்னர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து வயதும், நலமும் கொண்ட தமிழ்நாட்டை உருவாக்கிடும் உண்ணதமான எண்ணங்களுடன் தன்னிகரற்ற பல திட்டங்களை ஒவ்வொரு துறையிலும் உருவாக்கி நிறைவேற்றி வருகிறார்கள். இத்திட்டங்கள் வாயிலாக தமிழ்நாடு இந்தியாவில் முன்னணி மாநிலம் என போற்றப்படும் வகையில் நிறை வேற் றி யுள் ளார் கள். தமிழ்நாட்டில் இயற்கை வளங்கள், கோவில்கள் போன்ற சுற்றுலாத்தலங்களை உலகறிய செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். தமிழ்நாட்டின் வளர்ச்சியில் சுற்றுலாத்துறை பெரும்பங்காற்றுகிறது என்பது நன்கு உணர்ந்து சுற்றுலாத்தலங்களை மேம்படுத்திட ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி, இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், சித்தன்னவாசல் சுற்றுலாத்தலத்தினை மேம்படுத்திடும் வகையில் ரூ.3.90 கோடி மதிப்பீட்டில் சித்தன்னவாசல் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன் ப டுத் திக் கொள்ள வேண்டும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், ஏராளமான உள்ள+ர் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், அன்னியச் செலவாணியினை ஈட்டுதல் ஆகியவற்றில் சுற்றுலாத் துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்தியாவில் சிறப்பான சுற்றுலாத்தலங்களை அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலாத் தலங்கள், பழம்பெரும் திருக்கோயில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலை மற்றும் வனப்பகுதிகள், அழகிய கடற்கரைகள் போன்ற பல்வேறு சுற்றுலாத் தலங்கள் பலதரப்பட்ட சுற்றுலா பயணிகளையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய பெரும் வாய்ப்புகள் அடங்கிய சுற்றுலாத்துறையை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் சித்தன்ன வாசலை சுற்றுலாத்தலமாக மேம்படுத்திடும் வகையில் லேக் பிளாசா, பவுண்டன் பிளாசா, நடைபாதை, ஏரி அருகே வாகனம் நிறுத்தும் இடம், விளையாட்டுப் பகுதி, படகுத்தள கட்டிடம், சாப்ட்ஸ்பேஸ், தெருவிளக்கு வேலைகள், சிற்பம் மற்றும் கலை வேலைப்பாடுகள் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் இத்தகைய திட்டங்களை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள் அன்னவாசல் தேர்வுநிலைப் பேரூராட்சி, இந்திரா குடியிருப்பு பகுதியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள திருமண மண்டபத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினர்கள்.

இந்நிகழ்வுகளில் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, மாவட்ட சுற்றுலா அலுவலர் ரா.கார்த்திக், அன்னவாசல் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் சின்னச்சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வேலு, இலுப்பூர் வட்டாட்சியர் காமராஜு, சந்திரன், ஆர்.எஸ்.மாரி முத்து, இளையசூரியன், ஆர். எம்.செந்தில்குமார், முகமது ரிசா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்;

# திருவாரூர் மாவட்டத்தில் தூய்மை பணியாளர் நலவாரியம் மூலம் மின்னணு அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகள்

## தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் வழங்கினார்



**திருவாரூர்,ஆக.23-**
திருவாரூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியம் மூலம் மின்னணு அடையாள அட்டை மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் முனைவர்.திப்பம் பட்டி வெ.ஆறுச்சாமி தலைமையில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரிய கழகத்தலைவர் என்.இளையராஜா , கலெக்டர் வ.மோகனச் சந்திரன், , நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் , திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் , திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரி முத்து , தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய துணைத்தலைவர் கனிமொழி பத்மநாபன் , கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) ஃ திட்ட இயக்குநர் செல்வி.பல்லவிவர்மா, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் தெரிவித்ததாவது... தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட இந்நிறுவனத்திற்கு ஒரு சாதாரணமான மனிதரை தலைவராக்கி அழகு பார்த்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் பிறந்த இம்மாவட்டத்தில், இன்றைய தினம் தூய்மை பணியாளர்களிடம் குறை, நிறைகள் கேட்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மேற்கொள்ளப்படும்.

தூய்மை பணியாளர்கள் என அழகிய பெயரினை சூட்டியவர் முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் . அன்னை தெரசா போன்றவர்கள் தூய்மை பணியாளர்கள். கொரோனா போன்ற இக்கட்டான காலகட்டத்திலும் தூய்மை பணியாளர்கள் தனது பணியினை செவ்வனேவும், சிறப்பாகவும் செய்து வந்தனர். தூய்மை பணி என்பது சாதாரண பணி அன்று. நம் சுற்றுப்புறம் தூய்மையாக இருப்பதற்கு காரணம் தூய்மை பணியாளர்களே. தூய்மை பணியாளர்கள் அனைவரும் தங்களது குழந்தைகளுக்கு தவறாது கல்வி வழங்கி, அவர்களை பல்வேறு உயர் பதவி வகிக்க உறுதுணையாக இருக்க வேண்டும். ஒரு போதும் குழந்தைகளின் கல்வியினை இடைநிறுத்தல் கூடாது. தூய்மை பணியாளர்களுக்காக வழங்கப்படும் பாதுகாப்பு உபகரணங்களை முறையாக பயன்படுத்தி பாதுகாப்பாக இருத்தல் வேண்டும். தூய்மை பணியாளர்களுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவருகிறது என தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் முனை வர்.திப் பம் பட்டி வெ.ஆறுச்சாமி தெரிவித்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியம் மூலம் 100 தூய்மை பணியாளர்களுக்கு மின்னணு அடையாள அட்டையும், 2 பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகையும், 7 பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகையினையும் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் முனைவர். திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி வழங்கினார்கள். தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரிய கழகத்தலைவர் என்.இளையராஜா, கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் , திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் , திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரி முத்து , தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய துணைத்தலைவர் கனிமொழி பத்மநாபன் , கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) திட்ட இயக்குநர் செல்வி.பல்லவி வர்மா, ஆகியோர் உடனிருந்தனர்.

இந் நி கழ் வில், மாவட்ட வருவாய் அலுவலர் பா.கலைவாணி, திருவாரூர் நகர்மன்றத் தலைவர் புவனப்பிரியா செந்தில், மாவட்ட மேலாளர் (தாட்கோ) இரா.இராஜேந்திரன், மாநில நல வாரிய உறுப்பினர் குருநாதன் ;, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அமுதா, உதவி மேலாளர் (தாட்கோ) செல்வமாலா உள்ளிட்ட அரசு அலுவலர்கள், திருவாரூர் மாவட்ட அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள், நகராட்சி ஆணையர்கள், தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



**புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், ராராபுரம் கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது. இதனை ஏராளமான பெண்கள் பார்வையிட்டனர்.**

# திருமருகல் அருகே சேஷமூலை ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**நாகப்பட்டினம்,ஆக.23-**
நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் சேஷமூலையில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் வெள்ளிக்கிழமை நடைப்பெற்றது.

உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சேஷமூலை, இடையாத்தங்குடி, ஆலத்தூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கு சேஷமூலை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் சுமார் 595 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட மனுக்களின் உடனடி தீர்வாக வருமானச் சான்றுகள், மருத்துவ காப்பீடு அட்டை, வகுப்பு சான்றிதழ், குடும்ப அட்டை முகவரி மாற்றுதல், பட்டா மாறுதல், இருப்பிட மற்றும் பெயர் மாற்றம் பட்டா நகல் போன்றவைகளை பயனாளிகளுக்கு தனித் துணை கலெக்டர் (நிலம் எடுப்பு) சந்தான கோபாலகிருஷ்ணன் வழங்கினார். உடன் சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் பிரான்சிஸ் வட்ட வழங்கல் அலுவலர் ரகு திருமருகல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணன் சுப்ரமணியன் (கிராம ஊராட்சி) ஊராட்சி செயலாளர் முருகானந்தம் செந்தில், நடராஜன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டம்

## ஆண்டிபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கழிப்பறை கட்டுதல் பணிக்கான பூமிபூஜை



**திருவாரூர்,ஆக.23-**
திருவாரூர் அருகே ஆண்டிபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஓஎன்ஜிசி காவேரிஅசட் சமூக பொறுப்புணர்வு திட்டத்தில் கழிப்பறை கட்டுதல் பணிக்கான பூமிபூஜை நடைபெற்றது.இந்த பள்ளியில் 1 முதல் 8 வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ,மாணவிகள் 90க்கும் மேற்பட்டோர் உள்ளனர்.பள்ளி கல்வித்துறை சார்பில் ஓஎன்ஜிசி சமூக பொறுப்புணர்வு திட்டத்தில் மாணவ, மாணவிகள் பயன்பெற கழிப்பறை கட்டித்தர வேண்டும் என கோரிக்கை வைத்ததை தொடர்ந்து ஓஎன்ஜிசி ரூபாய் 14 லட்சம் செலவில் கட்டி தர முன்வந்துள்ளது.இதன்படி நேற்று திருவாரூர் அருகே ஆண்டிபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கழிப்பறை கட்டுமான பணிகள் தொடங்க பூமி பூஜை நடைபெற்றது.ஓஎன்ஜிசி சமூக பொறுப்பு திட்ட அதிகாரி துணை பொதுமேலாளர் தங்கமணி தலைமையில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில் ஓஎன்ஜிசி மனிதவளம் பொதுமேலாளர் ஜோசப்ராஜ்,பகுதி பொறுப்பாளர் ருடின் சார்ஜ்,ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம் மற்றும் சுப்பிரமணியன், சக்திவேல், வட்டார கல்வி அலுவலர்கள் அறிவழகன்,சுமதி, பள்ளி தலைமையாசிரியர் சுமாலின்,எஸ்எம்சி தலைவி மாரியம்மாள்,பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் செந்தில் குமார் மற்றும் ஆசிரியைகள், மாணவ,மாணவிகள் என கலந்து கொண்டனர்.கட்டுமான பணிகளை கடலூரை சேர்ந்த எல்டர்ஸ் பார் எல்டர்ஸ் தொண்டு நிறுவனம் செய்கிறது.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# திருச்சி மாவட்டம் பூவாளூர் பேரூராட்சியில் கட்டி முடிக்கப்பட்ட புதிய பேரூராட்சி அலுவலக கட்டிடம் மற்றும் சமுதாயக் கூட கட்டிடம்

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்

**திருச்சி,ஆக.23-**

திருச்சி மாவட்டம், பூவாளூர் பேரூராட்சி கட்டிடம் பழுதடைந்த நிலையில், அதனை அகற்றி புதிய கட்டிடம் கட்டப்படும் என அறிவித்ததை தொடர்ந்து மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பேரூராட்சி அலுவலக கட்டிடத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு , கலெக்டர் வே.சரவணன், முன்னிலையில் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து புதிய கட்டிடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, பூவாளூர் பேரூராட்சியில் அயோத்தி தாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூட கட்டிடத்தையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு குத்துவிளக்கேற்றி, திறந்து வைத்து சமுதாயக் கூட கட்டிடத்தினை பார்வையிட்டார்.

இந்நிகழ்வுகளில் இலால்குடி சட்டமன்ற உறுப்பினர் சௌந்திரபாண்டியன், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கோ.துவாரகநாத்சிங், செயற்பொறியாளர் சுப்பிரமணியன், பேரூராட்சி தலைவர் புவனேஸ்வரி பால்ராஜ், செயல் அலுவலர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருச்சி மாவட்டம் பூவாளூர் பேரூராட்சியில் மூலதன மானிய திட்டத்தின் கீழ் ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேரூராட்சி அலுவலக கட்டிடம், ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்தை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். இதில்கலெக்டர் வே.சரவணன், சவுந்திரராஜன் எம்எல்ஏ, பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் துவாரககநாத் சிங், செயற்பொறியாளர் சுப்பிரமணியன், பேரூராட்சி தலைவர் புவனேஸ்வரி கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையத்தில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி



**மயிலாடுதுறை,ஆக.23-**

மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்பு சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைத்த புதிய திட்டங்கள் மற்றும் அரசு நலதிட்ட உதவிகள் வழங்கியது குறித்த புகைப்படங்கள் அமைக்கப்பட்டிருந்தது. மேலும், தமிழ்நாடு அரசின் பல்வேறு சிறப்பு திட்டங்களான, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் திட்டம். இல்லம் தேடிக் கல்வி, இலவச பேருந்து பயண திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், நான் முதல்வன் திட்டம், உங்களைத்தேடி உங்கள் ஊரில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், மக்களுடன் முதல்வர் முகாம், கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம், முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித்தோட்டம் மற்றும் மாடித் தோட்டம் அமைக்க காய்கறி விதைகள் வழங்குதல், விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்குதல், விவசாயிகளுக்கு 1 இலட்சம் மின் இணைப்பு வழங்கும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், புதுமைப் பெண் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பள்ளி மாணவர்களுக்கு வானவில் திட்டம். மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு தொழில் சார் கடனுதவிகள் வழங்குதல். மீண்டும் மஞ்சப்பை, புதிய தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் புகைப்படங்கள், மேலும், பிற்படுத்தப்பட்டோர் நலத்;துறை அமைச்சர் மற்றும் பிற துறை அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் மற்றும் கலெக்டர் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தது. இப்புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ,மாணவிகள் பார்வையிட்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம்: கலெக்டர் பொ.ரத்தினசாமி பார்வையிட்டார்



**அரியலூர்,ஆக.23-**

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம்கள் நடைபெறுவதை கலெக்டர் பொ.இரத்தினசாமி, நேரில் பார்வையிட்டார்.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும், அன்றாடம் அணுகும் அரசுத் துறை சேவைகள் ஃ திட்டங்களை வசிக்கும் பகுதிக்கே சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின் திட்டம்", 15.07.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரியலூர் மாவட்டத்தில் 15.07.2025 முதல் 14.08.2025 வரை 36 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக 2-ஆம் கட்டமாக இன்றைய தினம் அரியலூர் நகராட்சி அலுவலகம் மற்றும் விக்கிரமங்கலம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடைபெற்றது.

அதன்படி அரியலூர் நகராட்சிக்கு உட்பட்ட 9 மற்றும் 11 ஆகிய வார்டுகளை ஒருங்கிணைத்து அரியலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை கலெக்டர் நேரில் பார்வையிட்டார். மேலும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் உடனடியாக கணினியில் பதிவேற்றம் செய்யப்படுதல், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் வழங்கப்படும் சேவைகள் குறித்து பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகள், முகாம்களுக்கு வருகை தரும் பொது மக்களின் உடல்நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகள் அளிக்கப்படுவதையும் கலெக்டர் பார்வையிட்டார்.

நடைபெற்ற முகாமில் மொத்தம் 1163 மனுக்கள் பெறப்பட்டது. மேற்படி மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய தீர்வு காணப்படும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும், 26.08.2025 அன்று திருமானூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கண்டிராதீர்த்தம், புதுக்கோட்டை மற்றும் திருமழப்பாடி ஆகிய ஊராட்சிகளை ஒருங்கிணைத்து திருமழப்பாடி நந்திகேஸ்வரர் மண்டபத்திலும், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட இறவாங்குடி, பிராஞ்சேரி, பிச்சனூர், சலுப்பை மற்றும் வெத்தியார்வெட்டு ஆகிய ஊராட்சிகளை ஒருங்கிணைத்து இறவாங்குடி கிராம ஊராட்சி செயலக வளாகத்திலும் உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடைபெற உள்ளது. இம்முகாம்கள் குறித்த விபரங்களை பொதுமக்களுக்கு முறையாக தெரிவிப்பதற்காக. தன்னார்வலர்கள் 13.08.2025 அன்று முதல் வீடு வீடாகச் சென்று விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடு வழங்கி முகாம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே. மேற்கண்ட பகுதிகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்களில் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இம்முகாமில் அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தராஜ், அரியலூர் வட்டாட்சியர் முத்துலெட்சுமி, மாவட்ட நிலை அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at
Manimaran Printers
No. 1 Santhanapuram,
Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam,
Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**போக்குவரத்து விதிகளை மதிக்கவும்**

# நாகப்பட்டினம் மாவட்டத்தில் 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்று உயர்கல்விக்கு விண்ணப்பிக்காத மாணவ மாணவிகளுக்கு உயர்கல்வி வழிகாட்டல் முகாம்

## கலெக்டர் ப.ஆகாஷ் தொடங்கி வைத்தார்



**நாகப்பட்டினம்,ஆக.23-**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவு திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் கீழ் "உயர்வுக்கு படி" மாணவர்களுக்கான உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கான வழிகாட்டல் நிகழ்ச்சி மூலம் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களில் உயர்கல்விக்கு விண்ணப்பிக்காத மாணவர்களுக்கு உயர் கல்வி அல்லது திறன் மேம்பாட்டுக்கான தகுந்த வாய்ப்புகளை ஏற்படுத்திடவும் எதிர்கால கல்வி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திடவும்;இ நாகப்பட்டினம் மாவட்டத்தில் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று கல்விக்கு விண்ணப்பிக்காத மாணவ மாணவிகளுக்கு உயர்கல்விக்கான வழிகாட்டல் முகாம்; மூன்றாம் கட்டமாக நாகப்பட்டினம் வருவாய் கோட்ட அளவில் தனியார் நர்சிங் கல்லூரியில் காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடைபெற்றது.

இம்முகாமில் கலை மற்றும் அறிவியல், செவிலியர், தொழில்நுட்ப கல்லூரிகள், தொழிற்பயிற்சி நிலையங்கள் போன்ற 17 உயர்கல்வி அரங்குகள் அமைக்கப்பட்டு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் விண்ணப்பித்தல், சேர்க்கை, கல்வி கடனுதவி, முதல் பட்டதாரி சான்றிதழ், இருப்பிட சான்று, சாதி சான்று, வருமான சான்று மற்றும் விடுதியில் தங்கி படித்தல் உள்ளிட்ட சேவைகள் செய்து தரப்பட்டது. இம்முகாமில் சுமார் 250 மாணவ மாணவிகள் உயர் கல்வியில் சேர்ந்து பயனடையும் வகையில் தங்களது பெற்றோர்களுடன் கலந்து கொண்டனர் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார். மேலும், இன்றையதினம் நடைபெற்ற "உயர்வுக்கு படி" எனும் மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டல் முகாமில் தொழிற் பயிற்சி நிலையங்களில் எலக்ட்ரீசியன், ஸ்டெனொகிராபி, பிட்டர் போன்ற பிரிவுகளில் பயில்வதற்கும், கலை மற்றும் அறிவியல், தொழில்நுட்ப கல்லூரிகளில் பயில்வதற்கும் மாணவர்களுக்கு சேர்க்கை விண்ணப்பத்தினை கலெக்டர் வழங்கினார். இம்முகாமில் நாகப்பட்டினம் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் கோ.அரங்கநாதன் , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆர்.கண்ணன், மாவட்ட திறன் பயிற்சி அலுவலக உதவி இயக்குநர் சு.செந்தில் குமாரிஇ மாவட்ட சமூக நல அலுவலர் கி.திவ்யபிரபா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) எம்.இரவிச்சந்திரன், முன்னோடி வங்கிகளின் மாவட்ட மேலாளர் ப.சந்திரசேகர், வட்டாட்சியர்;, தலைமையாசிரியர்கள், வருவாய் ஆய்வாளர்கள,; பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள்; கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் அருகே அத்தியூர் மாரியம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம்



**பெரம்பலூர்,ஆக.23-**

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம் அத்தியூர் கிராமத்தில் எழுந்தருளிக்கும் அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் காலை 10.00 மணிக்கு மேல் நடைபெற்றது. இதையொட்டி கோயில் முன்பு யாகசாலை கட்டப்பட்டன முதல் கால யாக பூஜை மங்கள இசையுடன் நேற்று முன்தினம் மாலை விக்னேஸ்வர பூஜை, அனுக்ஞை, அங்குரார்பணம், ரக்ஞாபந்தனம், வாஸ்து சாந்தி, கும்ப ஸ்தாபனம், பூர்ணாகதி, தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து நேற்று மாலை 2ம் கால மற்றும் 3ம் கால பூஜையும், நேற்று காலை 7 மணியளவில் நான்காம் கால யாகபூஜை மகா தீபாராதனை உட்பட பூஜைகள் நடந்தன. பின்னர் கோயில் கோபுர கலசங்கள் மீது புனித நீர் ஊற்றினர் பின்னர் தொடர்ந்து மூல சத்தானத்தில் உள்ள ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ மகா மாரியம்மன் ஸ்ரீ பாலமுருகன் மீது புனிதநீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மீது மஞ்சள் கலந்து புனிதநீர் தெளிக்கப்பட்டது.பின்னர் இதில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டன.கும்பாபிஷேக ஏற்பாடுகளை கோயில் நிறுவாகிகள்,ஊர் பொதுமக்கள் மற்றும் ஊர் இளைஞர்கள் செய்து இருந்தனர்.



மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் ஸ்ரீலஸ்ரீ பாய்கட்டி சித்தர் சுவாமி அறக்கட்டளை சார்பாக அதன் தலைவர் எஸ்.ராஜரெத்தினம்.தலைமையில் அன்னதானம் நடைபெற்றது அன்னதானத்தை சமூக சேவகர் அப்பர்சுந்தரம் துவக்கி வைத்தார் இதற்கான ஏற்பாடுகளை பொருளாளர் பழனிசாமி, செயலர் டிஜி. ராஜரெத்தினம், சமுக சேவகர் பத்மா, செய்திருந்தனர்

**காவல்துறை அறிவிப்பு**

**புதுக்கோட்டை மாவட்டம், பனையப்பட்டி காவல் நிலை**
**குற்ற எண்.51/17 U/S 392 IPC**
**தேடப்பட்டு வரும் குற்றவாளி**

புதுக்கோட்டை மாவட்டம் பனையப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 51/17 U/S 392 IPC எதிரி ராஜா, த/பெ.பால்ராஜ் தங்கம்மாள்புரம் 5வது தெரு, தூத்துக்குடி மாவட்டம் என்பவர் மீது பனையப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 51/17 U/S 392 IPC வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணைக்கு பிறகு மேற்படி எதிரி மீது திருமயம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் CC NO: 109/ 2018 -ன் படி வழக்கு விசாரணையில் இருந்து வந்த நிலையில் மேற்படி எதிரி தொடர்ந்து நீதிமன்றம் ஆஜராகாததால் நீதிமன்றம் அவரை தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்க வரும் 16.9.2025–ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே மேற்படி எதிரியாகிய குற்றவாளியாகிய நீங்கள் 16.09.2025ம் தேதியில் காலை 10:30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ திருமயம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தவறாமல் ஆஜராக கோரப்படுகிறது. தவறும் பட்சத்தில் நீங்கள் பிரகனப்படுத்தப்பட்ட குற்றவாளியாக அறிவிக்கப்படுவீர்கள் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

காவல் ஆய்வாளர் : 94421 21822
பனையப்பட்டி காவல் நிலையம் : 94981 00758.

# கும்பகோணத்தில் நடைபெற்ற உலக சாதனை நிகழ்ச்சி



**தஞ்சாவூர்,ஆக.23-**

கும்பகோணம் சத்திரம்கருப்பூரில் உள்ள ராஜபிரியா லெர்ன் ஆர்ச்சரி மாணவர்கள், 79ஆம் ஆண்டு சுதந்திர தினம், ராஜபிரியா லெர்ன் ஆர்ச்சரியின் 5ஆம் ஆண்டு துவக்க விழா, பெருமாண்டி ஊராட்சி மன்ற தலைவர் பாஸ்கர் பிறந்தநாள் விழா ஆகியவற்றை முன்னிட்டு நோபல் வேர்ல்டு ரெக்கார்டில் 30 மாணவர்கள் 40 சுற்று 14400 அம்புகளை 60 நிமிடங்களிள் எய்தி உலக சாதனை படைத்துள்ளனர். உலக சாதனையாக அங்கீகரத்து ராஜபிரியா லேர்ன் ஆர்ச்சரி இயக்குனர் ராஜபிரியா National archery level 1 உலக சாதனை பதக்கமும், சான்றிதழும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கும்பகோணம் மாநகராட்சி துணை மேயர் தமிழழகன், பெருமாண்டி ஊராட்சி மன்ற தலைவர் கருப்பூர் பாஸ்கர், மாநகராட்சி மண்டல குழு தலைவர் அசோக்குமார், சுவாமிமலை பேரூராட்சி திமுக செயலாளர் பாலசுப்பிரமணியன், வழக்கறிஞர் தட்டுமால் சங்கர், இணை இயக்குனர் ராஜா, நோபல் வேவ்ர்டு ரெக்கார்டு குழுவினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் அவர்கள், சீர்காழி**

மகாலட்சுமி,
க/பெ.கணேசன்,
மெயின்ரோடு,
வதிஸ்ட்டபுரம், திட்டகுடி வட்டம்
கடலூர் மாவட்டம்.
– மனுதாரர்
வருவாய் கோட்டாசியர், சீர்காழி.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை "நடேசன்" த/பெ.காளிமுத்து ,என்பவருக்கு இறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், 09.கோபாலசமுத்திரம் கிராமம் வசித்தவர் கடந்த 11.01.1985 ஆண்டு மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

மகாலட்சுமி, க/பெ.கணேசன்,
மனுதாரர்,
திட்டகுடி வட்டம்.
கடலூர் மாவட்டம்.

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **MAHASRI R D/o. C.Raja, Date of Birth : 22.10.2003, Permanently Residing at : D.No. 43/A, Kaveri Moolai Street, Thiruvidaimarudhur (PO), Thiruvidaimarudhur (TK) Thanjavur District, Tamilnadu - 612 104.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**MAHASRI R**

**தமிழ்நாடு அரசு**
**திருவாரூர் மாவட்டம்**
**கோட்டூர், வட்டார வளர்ச்சி அலுவலகம்**

**15–வது மத்திய நிதிக்குழு மானியம் – 2025–2026**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.2091/2025/அ2, நாள். 22.08.2025**
**மின் ஒப்பந்தப்புள்ளி**

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. திருவாரூர் மாவட்டம், கோட்டூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களால் 15–வது நிதிக்குழு மானியம்– 2025–2026 ஆம் ஆண்டு திட்டத்தின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட கோட்டூர் ஊராட்சியில் துணை சுகாதார மைய கட்டிடம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு 45.00 லட்சம். இ–மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரு உறைகள்) மூலம் வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 22.08.2025 முதல் 29.08.2025 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
   (i) மின் ஒப்பந்த ஆவணம் பதிவிறக்கம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 29.08.2025 அன்று 15.00 மணி
   (ii) மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 29.08.2025 அன்று 15.00 மணி முதல்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
கோட்டூர், திருவாரூர் மாவட்டம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வெ.ஆ.எண்.78/செ.ம.தொ.அ/திருவாரூர். நாள்: 22.08.2025

### இந்திய கிரிக்கெட் அணி
# தேர்வுக்குழுவில் மாற்றம் பி.சி.சி.ஐ. அதிரடி முடிவு



**மும்பை, ஆக. 23-**
இந்திய கிரிக்கெட் வாரியம் (பி.சி.சி.ஐ.), அஜித் அகர்கர் தலைமையிலான தேர்வுக் குழுவில் சில அதிரடி மாற்றங்களை செய்ய முடிவெடுத்துள்ளது. தற்சமயத்தில் அஜித் அகர்கர் தலைமையில் எஸ்எஸ் தாஸ், சுப்ரதோ பானர்ஜி, அஜய் ரத்ரா, எஸ் சரத் ஆகியோர் தேர்வுக்குழுவில் உள்ளனர்.

இதில் தேர்வுக்குழு தலைவர் அஜித் அகர்கர் மற்றும் அஜய் ராத்ரா ஆகியோரின் பதவிக்காலம் நீட்டிக்கப்படுவதாக பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது மறுபுறம் மற்றொரு உறுப்பினரான சரத் தனது பதவிக் காலத்தை முடித்துவிட்டார். ஆனால் அவரது பதவிக்காலத்தை நீட்டிக்க பி.சி.சி.ஐ. விரும்பவில்லை. அந்த இடத்தில் இந்திய முன்னாள் வீரர் பிரக்யான் ஓஜா வர உள்ளதாக கூறப்படுகிறது.

தாஸ் மற்றும் பானர்ஜியின் எதிர்காலம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றாலும், அவர்களுக்கு மாற்று நபருக்கான புதிய விண்ணப்பங்களை வரவேற்க பி.சி.சி.ஐ. தயாராகி வருவதாக கூறப்படுகிறது. தேர்வுக்குழு தலைவராக அஜித் அகர்கரே தொடருவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உங்கள் பவுலிங்கில் கேட்சை விட்ட போதே ஓய்வு எண்ணம் வந்தது
### சொல்கிறார் ராகுல் டிராவிட்



**டெல்லி, ஆக. 23-**
உங்கள் பவுலிங்கில் கேட்சை விட்டபோதே ஓய்வு எண்ணம் வந்ததாக முன்னாள் பெருஞ்சுவர் ராகுல் பேசினார்.

மெல்போர்னின் மைதானத்தில் ஒரு கேட்சை விட்டபோதுதான் முதன்முதலாக 'போதும் ஓய்வு பெற்றுவிடுவோம்' என்ற எண்ணம் தோன்ற ஆரம்பித்தது என்று இந்திய அணியின் முன்னாள் பெருஞ்சுவர் ராகுல் டிராவிட் மனம் திறந்துள்ளார்.

ரவிச்சந்திரன் அஸ்வினுடனான 'குட்டி ஸ்டோரீஸ்' யூட்யூப் ஷோவில் ஓர் உரையாடலில் இது தொடர்பாக ராகுல் டிராவிட் கூறியது: "உங்கள் பந்தில்தான் கேட்சை விட்டேன் அஸ்வின். மெல்போர்னில் அதுவும் மைக்கேல் ஹஸ்ஸிக்கு கேட்சை விட்டேன். அது நான் வாழ்க்கையில் ஒருபோதும் விடக்கூடிய கேட்ச் அல்ல. மிகவும் சுலபமான ஒரு கேட்ச்.

என் கிரிக்கெட் வாழ்க்கையில் நான் பல விஷயங்களை மறந்து விடுவேன். ஆனால் கேட்ச்களை விட்டது மட்டும் தொடர்ந்து நினைவில் உள்ளது. அந்தக் கணம்தான் சரியானது என்று தெரிந்தது. அந்தத் தருணம் தான் போதும் வேறு வேலைகளைப் பார்ப்போம் என்று தோன்ற ஆரம்பித்து விட்டது. அந்தத் தொடர் முடிந்தவுடனேயே எனக்குத் தெரியும்.

ஆனாலும், நான் உணர்ச்சிபூர்வமாக முடிவெடுக்க விரும்பவில்லை. இதுதான் என்னுடைய நிலை, இது தான் என்னுடைய உணர்வு எனும் பட்சத்தில் அந்தக் கணத்தில் நான் யோசித்தது என்னவெனில், டெஸ்ட் கிரிக்கெட் இனி நமக்கு அவ்வளவுதான். சரி நாம் வீட்டுக்குத் திரும்பி இதைப் பற்றி ஆற அமர யோசிப்போம் என்று முடிவெடுத்தேன். அப்போது இது உணர்ச்சிகரமான முடிவல்ல, அது முடிவுதான் என்று தெளிவடைந்தேன்.

எனவே, வீட்டுக்குப் போய் 2-3 வாரங்கள் குடும்பத்துடன் செலவிட்டேன். அப்போது முடிவெடுத்தேன்... இனி கிரிக்கெட் போதும், இனி போய் விளையாடப் போவதில்லை என்று திட்டவட்டமாக முடிவெடுத்தேன். நிறைய இளம் வீரர்கள் நன்றவண்ணம் இருந்தனர். விராட் கோலி, ரோஹித் சர்மா நன்றாக வந்து கொண்டிருந்தனர். விராட்டுக்கு ஓர் அருமையான தொடராக அந்தத் தொடரே அமைந்தது. புஜாராவும் ரன்கள் எடுத்துக் கொண்டிருந்தார். ரஹானே அருமையாக ஆடிக்கொண்டிருந்தார். ஒரு 4-5 வீரர்கள் சரியாக வந்து கொண்டிருந்தனர். இவர்கள்தான் அடுத்த தலைமுறை இந்திய வீரர்கள் என்பது எனக்குத் தெளிவாகப் புரிந்தது.

என் காலம் முடிந்து விட்டது. முடிந்த வரை பங்களிப்பு செய்தோம். அணியை என்னால் இயன்ற அளவுக்கு முன்னுக்குக் கொண்டு வந்தேன். ஆஸ்திரேலியா, இங்கிலாந்து இரண்டு தொடர்களிலும் 0-4 என்று தோல்வி கண்டது நிச்சயம் தாக்கம் ஏற்படுத்தியது. ஒரு சீனியர் வீரராக அணிக்காக பங்களிப்புச் செய்ய முடியவில்லையா, நகர்ந்து விட வேண்டியது தான்" என்று ராகுல் டிராவிட் கூறினார்.

டிராவிட் தன் கேப்டன்சியில் கிரெக் சாப்பல் பயிற்சிக் காலத்தில் தொடர்ச்சியாக17 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் சேசிங்கில் வென்ற ஒரே அணி என்ற இந்திய அணியின் உலக சாதனையை நிகழ்த்திக் காட்டியவர்.

2007 உலகக்கோப்பை சமயத்தில் கிரெக் சாப்பலும் இவரும் சேர்ந்து செய்யத் துணிந்த மாற்றங்கள் சச்சின் டெண்டுல்கர், கங்குலி உள்ளிட்ட சீனியர் வீரர்களுக்குப் பிடித்தமானதாக இல்லை. அதன் விளைவுதான் 2007 உலகக் கோப்பையில் டிராவிட் பழி வாங்கப்பட்டு இந்திய அணி முதல் சுற்றிலேயே வெளியேறியது குறிப்பிடத்தக்கது.

# ஒருநாள் கிரிக்கெட்: முதல் வீரராக அரிய உலக சாதனை படைத்த தென் ஆப்பிரிக்கா வீரர்

**மெக்காய், ஆக. 23-**
ஒருநாள் கிரிக்கெட்: முதல் வீரராக பிரீட்ஸ்கே அரிய உலக சாதனை படைத்தார் தென் ஆப்பிரிக்கா வீரர்.

தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2-வது ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த தென் ஆப்பிரிக்க அணி 49.1 ஓவர்கள் தாக்குப்பிடித்த நிலையில் 277 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக பிரீட்ஸ்கே 88 ரன்களும், ஸ்டப்ஸ் 74 ரன்களும் அடித்தனர். ஆஸ்திரேலியா தரப்பில் ஜம்பா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 278 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி தென் ஆப்பிரிக்க பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் வெறும் 37.4 ஓவர்களில் 193 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் 84 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற தென் ஆப்பிரிக்கா தொடரையும் 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது.

ஆஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக ஜோஷ் இங்கிலிஸ் 87 ரன்கள் அடித்தார். தென் ஆப்பிரிக்கா தரப்பில் நிகிடி 5 விக்கெட்டுகளும், பர்கர் மற்றும் செனுரன் முத்துசாமி தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இந்த ஆட்டத்தையும் சேர்த்து இது வரை 4 ஒருநாள் போட்டிகளில் மட்டுமே ஆடியுள்ள தென் ஆப்பிரிக்காவின் மேத்யூ பிரீட்ஸ்கே அந்த போட்டிகள் அனைத்திலும் 50 ரன்கள் அடித்துள்ளார். இந்த ஆண்டு ஒருநாள் கிரிக்கெட்டில் அறிமுகம் ஆன அவர் தனது முதல் போட்டியில் 150 ரன்கள் அடித்து அனைவரையும் திரும்பி பார்க்க வைத்தார். அத்துடன் அடுத்த 3 போட்டிகளிலும் முறையே 83, 57 மற்றும் 88 ரன்கள் அடித்து அசத்தியுள்ளார்.

இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் தனது முதல் 4 ஒருநாள் போட்டிகளிலும் 50 ரன்கள் அடித்த முதல் வீரர் என்ற அரிய உலக சாதனையை பிரீட்ஸ்கே படைத்துள்ளார். இதற்கு முன்னர் இந்தியாவின் நவ்ஜோத் சித்து தனது முதல் ஐந்து ஒருநாள் போட்டிகளில் தொடர்ச்சியாக 4 அரைசதங்கள் அடித்திருந்தார்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

## பிரதமர் மோடியின் தமிழக வருகை ரத்தா..?



**புதுடெல்லி, ஆக. 23-**
தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. இதனையடுத்து, தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க., நாம் தமிழர் மற்றும் த.வெ.க. உள்ளிட்ட கட்சிகள் அதற்கான அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இதற்கிடையில், கடந்த மாதம் 26-ம் தேதி 2 நாள் சுற்றுப் பயணமாக பிரதமர் மோடி தமிழகம் வந்தார். தூத்துக்குடி விமான நிலையத்தில் நடந்த விழாவில், ரூ.452 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்ட விமான நிலையத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார். பின்னர் அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் நடைபெற்ற ஆடி திருவாதிரை, முப்பெரும் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்று ரூ.1,000 மதிப்பிலான, பேரரசர் ராஜேந்திர சோழன் நினைவு நாணயம் ஒன்றையும் வெளியிட்டார்.

இதையடுத்து, வருகிற 26-ந்தேதி பிரதமர் மோடி மீண்டும் தமிழகத்திற்கு வர உள்ளார் என்று கூறப்பட்டது. சிதம்பரம் மற்றும் திருவண்ணாமலை பகுதிகளுக்கு செல்லும் பிரதமர் அங்கு சாமி தரிசனம் செய்வார் என்று தகவல் வெளியானது. தரிசனத்தை முடித்துவிட்டு நடராஜர் கோவிலில் இருந்து மனதின் குரல் நிகழ்ச்சி மூலம் நேரலையில் நாட்டு மக்களுக்கு உரையாற்ற இருப்பதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில், 26-ந்தேதி பிரதமர் மோடி தமிழகம் வரவிருந்த நிலையில் அவரது சுற்றுப் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மாற்றுப் பணி மற்றும் முக்கிய அலுவல்கள் காரணமாக இந்த பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் தமிழகம் வர பிரதமர் மோடி திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

## தெற்கு மண்டல அணி தேர்வு: மாநில கிரிக்கெட் வாரியங்களுக்கு பி.சி.சி.ஐ. எச்சரிக்கை விடுப்பு

**டெல்லி, ஆக. 23-**
துலீப் கோப்பை கிரிக்கெட் தொடருக்கு இந்திய டெஸ்ட் வீரர்களை தெற்கு மண்டல அணி தேர்வு செய்யாததையடுத்து மாநில கிரிக்கெட் சங்கங்களை பி.சி.சி.ஐ. எச்சரித்துள்ளது.

உள்நாட்டு கிரிக்கெட் தொடருக்கு மத்திய ஒப்பந்தத்தில் உள்ள வீரர்கள் அந்தந்த மாநில அணியில் தேர்வு செய்யப்பட்டாக வேண்டும் என்று மாநில கிரிக்கெட் சங்கங்களுக்கு பி.சி.சி.ஐ. கடிதம் மூலம் கண்டிப்புடன் தெரிவித்துள்ளது.

தெற்கு மண்டல அணி துலிப் கோப்பைக்கான அணியில் ராகுல், வாஷிங்டன் சுந்தர், பிரசித் கிருஷ்ணா, சாய் சுதர்ஷன், முகமது சிராஜ் போன்ற டெஸ்ட் வீரர்களைத் தேர்வு செய்யாமல் விட்டதுதான் பி.சி.சி.ஐ.-யின் இந்தக் கண்டிப்புக்குக் காரணம். இங்கிலாந்து தொடருக்குப் பிறகு இந்திய வீரர்கள் ஒரு மாத கால ஓய்வில் இருக்கின்றனர்.

பி.சி.சி.ஐ.யின் செயல்பாடுகள் தலைவர் அபய் குருவில்லா மாநில கிரிக்கெட் சங்கங்களுக்கு டெஸ்ட் வீரர்களை, மத்திய ஒப்பந்தத்தில் இருக்கும் வீரர்களைத் தேர்வு செய்யவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கடிதம் எழுதியுள்ளார். உள்நாட்டுத் தொடர்களின் பெருமையையும் தரத்தையும் தக்கவைக்க இங்கு இப்போது இருக்கும் இந்திய வீரர்களை அந்தந்த அணியில் தேர்வு செய்வது அவசியம். துலீப் டிராபி கிரிக்கெட் தொடருக்கு இந்திய அணியின் கிடைக்கக் கூடிய வீரர்களை தேர்வு செய்வது கட்டாயமாகும்'' என்று கண்டிப்புடன் தெரிவித்துள்ளார்.

ஆனால் மாநில வாரியங்கள் தரப்புக் கூறுவதென்னவெனில் இந்திய வீரர்கள் 'இந்தியா ஏ' மற்றும் போர்டு பிரெசிடெண்ட் லெவன் அணிகளில் ஆடலாம், துலிப் கோப்பை, தியோதர் கோப்பைகளில் அவர்களைத் தேர்வு செய்யும்போது அதுவரை கடினமாக பயிற்சி செய்து உழைத்த ரஞ்சி வீரர்களுக்கு வாய்ப்புக் கிடைக்காமல் துலீப் கோப்பை சீசன் முழுதும் பெஞ்சில் அமர வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் கடந்த சீசனில் நன்றாக ஆடியவர்கள் தங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று அதிருப்தி அடைகின்றனர் என்பதுதான் இதில் முக்கியமான விஷயம் என்கின்றனர்.

குருவில்லா, தன் கடிதத்தில், ஒப்பந்த வீரர்களோ இல்லையோ இந்திய அணித் தேர்வுக்குத் தங்களை தயார் செய்து வரும் அனைத்து வீரர்களும் உள்நாட்டுத் தொடர்களில் ஆட வேண்டும். எந்த ஒரு அறிவிப்புமின்றி இருந்து கொண்டே தங்கள் மாநில அணிக்கோ, உள்நாட்டு தொடர் அணிக்கோ ஆடாமல் தவிர்க்கும் வீரர்கள் இந்திய அணித் தேர்விற்கு பரிசீலிக்கப்பட மாட்டார்கள். தொடரில் ஆடவில்லை என்றால் முன்கூட்டியே அனுமதி பெற்று விடுப்பில் செல்ல வேண்டும். விடுப்பில் செல்வதற்கும் உகந்த காரணமே பரிசீலிக்கப்படும்'' என்று குறிப்பிட்டுள்ளார். ஆனாலும் தெற்கு மண்டலம், தன் அணியை இந்தக் கடிதத்திற்குப் பிறகேனும் மாற்றுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## அமெரிக்கா: செஸ் போட்டியில் 3-வது சுற்றை டிரா செய்தார் குகேஷ்

**செயின்ட் லூயிஸ், ஆக. 23-**
அமெரிக்காவில் நடைபெற்ற செஸ் போட்டியில் 3-வது சுற்றை டிரா செய்து குகேஷ் முடித்தார்.

அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரில் சின்க்பீல்டு கோப்பை செஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் 3-வது சுற்றில் உலக சாம்பியனான இந்தியாவின் டி.குகேஷ், பிரேசிலின் சாமுவேல் சேவியனுடன் மோதினார். இதில் கருப்பு காய்களுடன் விளையாடிய குகேஷ் 44-வது நகர்த்தலின் போது ஆட்டத்தை டிராவில் முடித்தார்.



இந்திய கிராண்ட் மாஸ்டரான ஆர்.பிரக்ஞானந்தா, உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் அப்துசத்தோரோவை எதிர்த்து விளையாடினார். இந்த ஆட்டம் 46-வது நகர்த்தலின் போது டிரா ஆனது. அமெரிக்காவின் பேபியானோ கருனா, 46-வது நகர்த்தலின் போது பிரான்ஸின் அலிரேசா பிரோஸ்ஜாவை தோற்கடித்தார்.

அமெரிக்காவின் லெவோன் அரோனியன், பிரான்ஸின் மாக்சிம் வச்சியர் லாக்ரேவ் மோதிய ஆட்டம் 73-வது நகர்த்தலின் போது டிராவில் முடிவடைந்தது. அமெரிக்காவின் வெஸ்லி சோ, போலந்தின் டுடா ஜான் கிரிஸ்டோப் மோதிய ஆட்டம் 32-வது நகர்த்தலின் போது டிரா ஆனது.

3 சுற்றுகளின் முடிவில் பேபியானோ கருனா, லெவோன் அரோனியன், பிரக்ஞானந்தா ஆகியோர் தலா 2 புள்ளிகளுடன் முதல் 3 இடங்களில் உள்ளனர். வெஸ்லி சோ, மாக்சிம் வச்சியர் லாக்ரேவ் சாமுவேல் சேவியன், அலிரேசா ஃபிரோஸ்ஜா, குகேஷ் ஆகியோர் தலா 1.5 புள்ளிகளுடன் முறையே 4 முதல் 8-வது இடங்களில் உள்ளனர். டுடா ஜான் கிரிஸ்டோப் ஒரு புள்ளியுடன் 9-வது இடத்திலும், நோடிர்பெக் அப்துசத்தோரோவ் 0.5 புள்ளிகளுடன் கடைசி இடத்திலும் உள்ளனர்.

# த.வெ.க. மாநாட்டிற்கு இடையூறா? சில்லித்தனமான வேலைகளை தி.மு.க. செய்யாது: அமைச்சர் மூர்த்தி




**மதுரை, ஆக. 23-**
த.வெ.க. மாநாட்டிற்கு இடையூறு? சில்லித்தனமான வேலைகளை தி.மு.க. செய்யாது என்று அமைச்சர் மூர்த்தி பேசினார்.

மதுரையில் அமைச்சர் மூர்த்தி நிருபர்களிடம் கூறியதாவது:-

புதிய பேருந்து நிலையத்தில் நாள் ஒன்றுக்கு 200-க்கும் மேற்பட்ட பேருந்துகள் வந்து செல்கின்றன. 25 வணிக வளாக கடைகள் அமைக்கப்பட்டு ரூ.4.90 கோடி மதிப்பீட்டில் இந்த பேருந்து நிலையம் அமைய பெற்றுள்ளது.

த.வெ.க. மாநாட்டுக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தவில்லை. எதிரிக்குக் கூட நாங்களோ முதலமைச்சரோ இடையூறு வேலைகளை பார்ப்பதில்லை. இந்த சில்லித்தனமான வேலைகளை எந்த காலத்திலும் தி.மு.க. ஒரு போதும் செய்யாது. ஷேர் கொடுக்கக் கூடாது, வாய்க்கால் தோண்டுவது, இடையூறு செய்வது போன்ற பணிகளை தி.மு.க. தொண்டன் ஒருவன் கூட செய்ய மாட்டான். உண்மைக்கு மாறான செய்தியை சொல்லுகிறார்கள். யாரோ சொல்லச் சொல்லி த.வெ.க.வினர் சொல்கிறார்கள். தி.மு.க. இதுபோன்ற இடையூறுகளை ஒருபோதும் செய்யாது. இவ்வாறு அவர் கூறினார்.

# 'ஜன்தன்' வங்கி கணக்கு செப்டம்பர் மாதத்துக்கு பின்னர் செயல்படாதா?
### மத்திய அரசு விளக்கம்



**புதுடெல்லி, ஆக. 23-**
மத்திய-மாநில அரசுகளின் பெரும்பாலான நிதி உதவிகள் பயனாளிகளுக்கு நேரடியாக அவர்களது வங்கி கணக்குகளில் தற்போது செலுத்தப்பட்டு வருகிறது. நாட்டில் ஏழைகள் பலர் வங்கி கணக்கு இல்லாமல் இருந்த நிலையில் அனைவரும் வங்கி கணக்கை தொடங்குவதற்காக கடந்த 2014-ம் ஆண்டு பிரதமர் மோடி 'ஜன்தன்' திட்டத்தை கொண்டு வந்தார்.

இந்த திட்டத்தின் மூலம் குறைவான கட்டண இருப்பு இன்றி வங்கி கணக்கை பராமரிக்க முடியும். இதன்மூலம், கோடிக்கணக்கான இந்தியர்கள் முறையான நிதி அமைப்புக்குள் கொண்டுவரப்பட்டனர். 'ஜன்தன்' திட்டத்தின் கீழ் 56 கோடியே 16 லட்சம் பேர் வங்கி கணக்கு தொடங்கியுள்ளனர். இவர்களுடைய வங்கி கணக்கில் ரூ.2 லட்சத்து 67 ஆயிரத்து 755 கோடி பணம் இருப்பு உள்ளது.

இந்தநிலையில், கே.ஒய்.சி. (உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள்) என்ற வாடிக்கையாளர்களின் அடையாளத்தையும், முகவரியையும் வங்கிகள் சரிபார்க்கப் பயன்படுத்தும் செயல்முறையை (அப்டேட்) சேர்க்கவில்லை என்றால் 'ஜன்தன்' வங்கி கணக்குகள் செப்டம்பர் 30-ந்தேதிக்கு பிறகு செயல்படாது என்று சமூக வலைதளங்களில் தகவல் பரவி வருகிறது. இதனால் வங்கிகள் கேட்கும் அடையாளம் மற்றும் முகவரி ஆவணங்களுடன் கே.ஒய்.சி. செயல்முறையில் கூடுதல் விவரங்களை இணைக்க 'ஜன்தன்' வங்கி கணக்கு வைத்திருப்பவர்கள் வங்கிகளுக்கு படையெடுக்க தொடங்கியுள்ளனர்.

இதுகுறித்து, மத்திய அரசின் பத்திரிகை தகவல் அலுவலக தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில், '' இந்த தகவலில் உண்மை இல்லை. கே.ஒய்.சி. விவரங்களை வாடிக்கையாளர்கள் சேர்க்க வேண்டும் என்பது கட்டாயம்தான். அதேநேரத்தில் கே.ஒய்.சி. தகவல் சேர்க்கப்படவில்லை என்றாலும் வங்கி கணக்கு செயல்படும் '' என்று கூறப்பட்டுள்ளது.

### போக்குவரத்து நெரிசல் காரணமாக
# சென்னையிலிருந்து தாமதமாக புறப்பட்ட விமான சேவைகள்



**சென்னை, ஆக. 23-**
போக்குவரத்து நெரிசலால் சென்னையிலிருந்து தாமதமாக புறப்பட்ட விமான சேவைகள்.

பல்லாவரம், குரோம்பேட்டை பகுதிகளில் போக்குவரத்து நெரிசலால் சென்னையிலிருந்து 10-க்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாகப் புறப்பட்டன.

சென்னை பல்லாவரம் மேம்பாலத்தில் நேற்று காலை தனியார் கல்லூரி பேருந்து ஒன்று மேம்பாலத் தடுப்பில் மோதியது. இருசக்கர வாகனம் ஒன்று குறுக்கே வர, பேருந்து ஓட்டுநர் சாலையின் தடுப்பின் மீது பேருந்தை ஏற்றியுள்ளார்.

இதனால் தடுப்புகள் சேதமடைந்ததால் பல்லாவரம் மேம்பாலம் தற்காலிகமாக ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்டு பல்லாவரத்தில் இருந்து விமான நிலையம் செல்லும் மார்க்கத்தில் வாகனங்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன. மறுவழியில் தாம்பரம் நோக்கிச் செல்லும் வாகனங்கள் மேம்பாலத்தின் கீழே மட்டும் அனுமதிக்கப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதியில் நேற்று காலை கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சுமார் 3 கிமீ தூரத்துக்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றன.

இந்நிலையில் விமான நிலையம் செல்லும் பாதையில் வாகனங்கள் அணிவகுத்து நின்றதால் பலரும் விமான நிலையங்களுக்குச் சரியான நேரத்தில் செல்ல முடியாமல் தவித்தனர்.

இதையடுத்து பயணிகளின் கோரிக்கைக்கு ஏற்ப சென்னையில் இருந்து பல விமானங்கள் தாமதமாக புறப்பட்டுச் சென்றன.

சென்னை விமான நிலையத்தில் கோலாலம்பூர், மஸ்கத், கொழும்பு விமானங்கள் உள்பட 10-க்கும் மேற்பட்ட விமானங்கள் 30 நிமிடங்கள் வரை தாமதமான நிலையில் புறப்பட்டன. தற்போது பல்லாவரம் மேம்பாலம் பகுதில் போக்குவரத்து சீராக உள்ளது குறிப்பிடத்தக்கது.

தடுப்புகள் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய கல்லூரிப் பேருந்தின் ஓட்டுநர் உதயா என்பவர் மதுபோதையில் இருந்தது விசாரணையில் தெரியவந்துள்ளதையடுத்து அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# இலங்கை அணி இந்தியாவுக்கு சவால் அளிக்கும்: பாசித் அலி

**கராச்சி, ஆக. 23-**
இலங்கை அணி மட்டுமே இந்தியாவுக்கு சவால் அளிக்கும் என்று பாகிஸ்தான் முன்னாள் வீரர் பாசித் அலி தெரிவித்துள்ளார்.

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் செப்டம்பர் 9-ந்தேதி முதல் 28-ந்தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது. இந்த தொடர் இம்முறை டி20 வடிவில் நடத்தப்பட உள்ளது. இந்த தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்கின்றன. அவை இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

'ஏ' பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன் அணிகளும், 'பி' பிரிவில் ஆப்கானிஸ்தான், வங்காள தேசம், இலங்கை, ஹாங்காங் அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர்4 சுற்றுக்கு முன்னேறும்.

இதில் ரசிகர்களை மிகுந்த எதிர்பார்ப்புக்கு உள்ளாக்கி இருக்கும் இந்தியா-பாகிஸ்தான் ஆட்டம் செப்.14-ந் தேதி துபாயில் நடைபெற உள்ளது. இந்த ஆட்டத்தில் மட்டுமின்றி இந்த தொடரிலும் இந்திய அணியே சாம்பியன் பட்டம் வெல்லும் என்பது பலரது கணிப்பாக உள்ளது. இருப்பினும் பாகிஸ்தான், இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளை குறைத்து மதிப்பிட முடியாது.

இந்நிலையில் இந்த தொடரில் இலங்கை அணி மட்டுமே இந்தியாவுக்கு சவால் அளிக்கும் என்று பாகிஸ்தான் முன்னாள் வீரர் பாசித் அலி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பேசிய அவர், "இந்தியா மிகவும் வலுவான அணியாக உள்ளது. என்னை கேட்டால் இலங்கை அணியால் மட்டுமே அவர்களுக்கு சவால் அளிக்க முடியும் என்று நினைக்கிறேன்'' என கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# கொட்டாம்பட்டி புதிய பேருந்து நிலைய கட்டிடத்தை முதல்வர் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்

**மேலூர் ஆக 23-**

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதிக்குட்பட்ட கொட்டாம்பட்டி யில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் மற்றும் மதுரை பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் ஆகியவற்றின் கீழ் ரூபாய் 4.90 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலைய கட்டிடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

வணிகவரி மற்றும் பத்திரப்பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் 27 ஊராட்சிகள், 206 கிராமங்கள், 1 லட்சத்து 14,339 மக்கள் தொகை கொண்ட ஊராட்சியாகும். கொட்டாம்பட்டி பேருந்து நிலையத்தில் தினந்தோறும் 300 பேருந்துகள் வந்து செல்கின்றன. புதிய பேருந்துநிலையத்தில் 1.44 ஏக்கரில், கட்டிடத்தின் பரப்பளவு 12697 சதுர அடியில், வாகனங்கள் நிறுத்துமிடத்தின் பரப்பளவு 7319 சதுர அடி, பஸ் நிறுத்துமிடம் 8, இதில் 25 வணிக வளாக கடைகள், இதர வசதிகள் உணவகம், பணியாளர்கள் ஒய்வு அறை, அலுவலக அறை, கழிப்பறை கட்டிடம், மழைநீர் வடிகால் வசதி, உயர் கோபுர மின்விளக்கு, தாய்மார்கள் பாலூட்டும் அறை, ஆகிய வசதிகளுடன் உள்ளது. நிகழ்ச்சியில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் பிரவீன்குமார், செயற்பொறியாளர் ஊரக வளர்ச்சி இந்துமதி, திட்ட இயக்குநர் வானதி ( மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை),முன்னாள் கொட்டாம்பட்டி ஊராட்சி மன்ற தலைவரும், கொட்டாம்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.என்.எஸ். பாலசுப்பிரமணியன்,கொட்டாம்பட்டி, மேலூர் தி.மு.க. ஒன்றிய கழக செயலாளர்கள், ராஜராஜன், கேசம்பட்டி ராஜா, பழனி, கீழவளவு செல்வராஜ், ராஜேந்திர பிரபு, வெள்ளலூர் இளங்கண்ணன், தாசில்தார் செந்தாமரை, கொட்டாம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இரா. செல்லப்பாண்டியன், சங்கர் கைலாசம், தி.மு.க. மாவட்ட நிர்வாகிகள் நாவினிப்பட்டி வேலாயுதம், தற்காகுடி சரவணன், குமரேசன், ஊராட்சி செயலர் சிவராமகிருஷ்ணன், அட்டப்பட்டி குமார், ரவிச்சந்திரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள், சுற்றுப்புற கிராம பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் மேகமலை பிரிவு மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி சார்பில் மாதிரி சோலார் பழங்குடியினர் கிராம திட்டம் தொடக்க நிகழ்ச்சியில் திட்ட ஒப்புதல் ஆணையினை கலெக்டர் ரஞ்ஜீத்சிங், ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் வனபாதுகாவலர் ஆனந்த் பனியர் பழங்குடியினர் சமூக பிரதிநிதிகள் முன்னிலையில் வழங்கினர்.

# வத்தலகுண்டு அருகே சந்தையூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்



**வத்தலகுண்டு.ஆக.23**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே உள்ள சந்தையூர் ஊராட்சியைச் சேர்ந்த வடக்கு வலையபட்டியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது, நிலக்கோட்டை ஆதிதிராவிட நலத் தாசில்தார் சிவக்குமார் தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சி செயலர் ஜெயச்சந்திரன், வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் குப்புசாமி, வத்தலக்குண்டு வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சிகள் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்,

வத்தலக்குண்டு வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் கே.பி. முருகன். தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் கனிக்குமார். வத்தலக்குண்டு கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பி கனக துரை. ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி மனுக்கள் பெற்று முகாமினை துவக்கி வைத்தார்கள், முகாமில் வருவாய் மின்சாரம் வேளாண் உள்பட 16 துறை அதிகாரிகள் கலந்து கொண்டு பொது மக்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டார்கள்.

மொத்தம் 506 மனுக்கள் பெறப்பட்டது. இதில் 20 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டது. வாங்கிய மனுக்கள் அனைத்தும் உடனடியாக ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டது, முகாமில் வருவாய் ஆய்வாளர்கள் வெண்ணிலா, பரிமளா கிராம நிர்வாக அலுவலர்கள் பாண்டி, சரண்யா நாகேந்திரன், தெய்வேந்திரன் உள்பட பல்வேறு கிராம நிர்வாக அலுவலர்கள் பணி செய்தார்கள்,

ஒன்றிய தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பாளர் சத்திரியன், ஒன்றிய மாணவர் அணி பார்த்திபன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் விஜயரங்கன். தி.மு.க. கிளைச் செயலாளர் துறை ஒன்றிய பிரதிநிதி ரமேஷ் மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் ஷாஜகான் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் செல்வகுமார் உள்பட திரளானவர்கள் கலந்து கொண்டார்கள். முகாமிற்கான ஒருங்கிணைப்பு பணிகளை வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர் நாச்சியப்பன் செய்து இருந்தார், சந்தையூர் ஊராட்சி செயலர் பெரிச்சி அனைவரையும் வரவேற்றார். முகாமின் முடிவில் வத்தலக்குண்டு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் புவனேஸ்வரி நன்றி கூறினார்.

# வில்வாதம் பட்டியில் உழவரைத் தேடி வேளாண்மை உழவர் நலத்துறை செயல் விளக்கம் திட்டம்



**ஒட்டன்சத்திரம்.ஆக.23**

திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டி வட்டாரம் வில்வாதம்பட்டியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் உழவரைத்தேடி வேளாண்மை - உழவர் நலத்துறை திட்டம் நடைபெற்றது. அதில் வேளாண்மை அலுவலர் அப்துல் காதர் ஜெய்லானி, உதவி வேளாண்மை அலுவலர் தேவேந்திரன்,உதவி தோட்டக்கலை அலுவலர் பிரகாஷ் உள்ளிட்ட அலுவலர்கள் தங்கள் துறை சார்ந்த கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், நுண்ணீர் பாசன திட்டம், மாநில வேளாண்மை வளர்ச்சி திட்டம், மண்வள இயக்கம் போன்றதிட்டங்களை விவசாயிகளிடம் எடுத்துரைத்தனர். இந்நிகழ்வில் காந்திகிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் இளங்கலை வேளாண்மை இறுதி ஆண்டு மாணவிகள் இலக்கியா, அபிராமி,அமிர்தா, காயத்ரி, கனிஷ்கா உள்ளிட்ட மாணவிகள் தென்னையில் குரும்பை உதிர்வை கட்டுப்படுத்தும் வழிமுறைகள், பயிர்களில் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறைகள் மற்றும் மேலாண்மை முறைகளை பற்றியும், சூரிய மின் வேலி திட்டம், சாணிபாசி கரைசல் பற்றி விவசாயிகளிடம் எடுத்துக் கூறினர். படம். திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டி வட்டாரம் வில்வாதம் பட்டியில் உழவரைத் தேடி வேளாண்மை உழவர் நலத்துறை செயல் திட்டம் விளக்க முகாம் நடைபெற்றது.

# சந்தனக்கருப்பு சுவாமி கோவிலில் அமாவாசை பூஜை



**நத்தம், ஆக, 23**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் எம்.ஜி.ஆர் நகரில் உள்ள அரண்மனை சந்தனகருப்புசுவாமி கோவிலில் ஆவணி மாத அமாவாசை பூஜை விழா நடந்தது.

இதையொட்டி சுவாமிக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்யப்பட்டு பால்,பழம், பன்னீர், புஷ்பம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும், பூஜைகளும் நடந்தது இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

# அருப்புக்கோட்டையில் பெண்ணிடம் பணம் பறிப்பு

**அருப்புக்கோட்டை, ஆக.23-**

தூத்துக்குடி மாவட்டம் வீரபாண்டியாபுரத்தை சேர்ந்தவர் முத்து குரு(வயது 48). இவர் மதுரையில் தங்களது குடும்பத்திற்கு ஜவுளி எடுப்பதற்காக அருப்புக்கோட்டை கணேஷ் நகரில் உள்ள தனது சகோதரியின் வீட்டிற்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்தார். அருப்புக்கோட்டை யில் திருச்சுழி சாலையில் உள்ள பஸ் நிறுத்தத்தில் இறங்கி பையை பார்த்தபோது. பையில் ஜவுளி எடுப்பதற்காக பையில் வைத்திருந்த ரூ. 1லட்சத்து 15 ஆயிரம் பணம் திருடு போனது கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து முத்துகுரு அருப்புக்கோட்டை டவுன் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அவரது புகார் அடிப்படையில் போலீசார் சி.சி.டி.வி .கேமரா காட்சிகளை ஆய்வு செய்து பெண்ணிடம் பணத்தை திருடி சென்ற மர்ம நபரை போலீசார்

தேடி வருகின்றனர். அருப்புக்கோட்டையில் அகமுடையார் மஹால் இருந்து திருச்சுழி சலையில் உள்ள பகுதிகளில் பஸ்ஸில் அடிக்கடி பணம் திருடு போவது வழக்கமாக உள்ளது. எனவே காவல்துறை அந்த பகுதியில் கூடுதல் காவலரை நியமித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். என சமூக ஆர்வலரின் கருத்தாக உள்ளது.

# விருதுநகரில் தகவல் தொழில் நுட்ப உதவியாளர் தற்காலிக பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்
## கலெக்டர் சுகபுத்ரா தகவல்

**விருதுநகர்.ஆக.23.**

சமூக நல அலுவலகத்தின் கீழ் செயல்படும் மாவட்ட மகளிர் அதிகார மையத்தின் தகவல் தொழில் நுட்ப உதவியாளர்(PMMVY ) பணியிடத்திற்கு 11 மாதத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பதவியின் பெயர்- தகவல் தொழில் நுட்பஉதவியாளர் கல்வித்தகுதி கணினி, தகவல் தொழில் நுட்பபிரிவில் இளங்கலைபட்டம் பெற்றிருக்கவேண்டும்,

மேலும், முன் அனுபவம், அரசு சாரா தகவல் தொழில்நுட்ப சார்ந்த மாநில அல்லது மாவட்ட அளவில் தரவு மேலாண்மை,செயல்முறை ஆவணங்கள் அடிப்படையிலான அறிக்கையிடல் வடிவங்களில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்கவேண்டும்,

வயது வரம்பு 35 வயதிற்குள் இருக்கவேண்டும். தொகுப்பூதியமாக மாதந்தோறும் ரூ.20000- வழங்கப்படும். விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய நாள் 25.08.2025 அன்றே கடைசி நாளாகும்.

மேலும், தொடர்புக்கு மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், விருதுநகர் மாவட்டம். என்ற முகவரிக்கு சமர்பிக்கவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா தொரிவித்துள்ளார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# முதுகுளத்தூரில் வட்டார அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம்



**முதுகுளத்தூர் ஆக.23**

மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவுக்கு இனங்க குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஆணையாளர் ஜானகி தலைமை தாங்கினர். வட்டார வளர்ச்சி அலுவலர் பாலதண்டாயுதபானி முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் குழந்தைகள் பராமரிப்பு -குழந்தை திருமணம்- போக்சோ சட்டம் குழந்தை தொழிலாளர் பிரச்சினை பற்றியும் -நிதி ஆதரவு திட்டம் மற்றும் அன்பு கரங்கள் குழந்தைகள் கல்வி உதவி திட்டம் குறித்து குழந்தைகள் பாதுகாப்பு பணியாளர் ஆர். மகேஸ்வரன் கூட்டத்தில் விளக்கி கூறினர். காவல் துறையினர் -உள்ளாட்சி துறை அதிகாரிகள் ஐசிடிஎஸ் அலுவலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



ஆவணி அமாவாசையை முன்னிட்டு மதுரையின் அட்சய பாத்திரம் டிரஸ்ட் சார்பில் அதன் சேர்மன் நெல்லை பாலு தலைமையில் தெப்பக்குளம் முத்தீஸ்வரர் கோவிலில் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் அன்னதானம் வழங்கினார்.

# மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் வீடு,வீடாக சென்று மக்களை எடப்பாடியாரின் எழுச்சி பயணத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்க திட்டமிட்டுள்ளோம்
## மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் சரவணன் பேட்டி



**மதுரை, ஆக 23-**

மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் வீடு,வீடாக சென்று மக்களை எடப்பாடியாரின் எழுச்சி பயணத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்க திட்டமிட்டுள்ளோம் என்று அ.தி.மு.க.மாநில மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் சரவணன் தெரிவித்துள்ளார். 2026 சட்டமன்ற தேர்தலையோட்டி அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.செப்டம்பர் முதல் வாரத்தில் மதுரை மாவட்டத்திலுள்ள 10 சட்டமன்றத் தொகுதிகளில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள நிலையில் அ.தி.மு.க. மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் சரவணன் மீனாட்சி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்து எடப்பாடி பழனிச்சாமியின் சுற்றுப்பயணத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.வேஷ்டி, சேலை மற்றும் அ.தி.மு.க.வின் சாதனை நோட்டீஸ்களை டாக்டர் சரவணன் பொதுமக்களுக்கு வழங்கினார். முன்னதாக அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிச்சாமியின் திருமண நாளை முன்னிட்டு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அ.தி.மு.க.மாநில மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் சரவணன் சிறப்பு பூஜை செய்து வழிபட்டார். இதில் நிர்வாகிகள் முனிச்சாலை சரவணன், டால்பின் அசோக், பைக்காரா செழியன், ராமசுப்பு, ராமமூர்த்தி, சுந்தர், நேருநகர் கணேசன், ரஞ்சித்முகமது உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்

பின்னர் அ.தி.மு.க.மாநில மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் சரவணன் நிருபர்களிடம் கூறுகையில், சட்டமன்ற தேர்தலை ஒட்டி இல்லம் தோறும் எடப்பாடியார் என்கிற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடத்தி வருகிறோம். எடப்பாடியாரின் எழுச்சி பயணத்தில் பங்கேற்குமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்து வருகிறோம்.மதுரை மாவட்டத்திலுள்ள அ னைத்து பகுதிகளுக்கும் வீடு,வீடாக சென்று மக்களை எழுச்சி பயணத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்க திட்டமிட்டுள்ளோம்.

எழுச்சி பயணத்தில் தி.மு.க. செய்த வஞ்சகத்தையும், அ.தி.மு.க. செய்த சாதனைகளை எடப்பாடி பழனிச்சாமி கூறி வருகிறார். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா வழியில் மக்களுக்காக எடப்பாடி பழனிச்சாமி பணியாற்றி வருகிறார்.எழுச்சி பயணத்தில் எடப்பாடி பழனிச்சாமி எளிய மக்களுக்கான திட்டங்களையும், வாக்குறுதிகளையும் அளித்து வருகிறார். ஆகவே கண்டிப்பாக 2026- ல் எடப்பாடியார் தலைமையில் அ.தி.மு.க.ஆட்சி அமையும். இவ்வாறு அவர் கூறினார்.

# லெக்கை கையன்கோட்டை புறவழிச் சாலையில் உயர் கோபுர மின் விளக்கை சரி செய்ய கோரிக்கை இரவு நேரங்களில் அதிக விபத்துக்கள் ஏற்படுவதால் வாகன ஓட்டிகள் அச்சம்

**ஒட்டன்சத்திரம். ஆக.23**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் ஏற்படும் கடும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக இலக்கிய கோட்டையில் இருந்து தாளையும் வரை புறவழிச் சாலை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது இந்த புறவழிச் சாலை வழியாகத்தான் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள், சுற்றுலா பேருந்துகள், இரவு நேர பேருந்துகள் கனரக லாரிகள் தினமும் கோயம்புத்தூர் பொள்ளாச்சி, தாராபுரம், திருப்பூர், மேட்டுப்பாளையம், ஊட்டி, மதுரை திண்டுக்கல் தேனி சென்னை பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு பயண நேரத்தை குறைக்கும் பொருட்டு இந்த நான்கு வழிச்சாலை வழியாகத்தான் சென்று வருகின்றனர். லெக்கேங்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள புரவழிச் சாலை ஆரம்பிக்கும் பகுதியில் உயர் கோபுர மின்விளக்கு ஒன்று கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக எறியாமல் இருக்கிறது இதனால் இரவு நேரங்களில் வரும் இருசக்கர நான்கு சக்கர வாகன ஓட்டிகள் அருகில் உள்ள சாலை செக் பண்ணிடுவதற்காக தோண்டப்பட்டுள்ள பள்ளம்,ஜல்லி, மணல் குவியல்களில் தினமும் விழுந்து விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

அதிகாரிகளிடம் பல முறை புகார் கூறியும் கண்டு கொள்ளாமல் அலட்சியமான முறையில் பதில் கூறி வருகின்றனர் எனவும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக புறவழிச் சாலையில் அமைக்கப்பட்டுள்ள உயர் கோபுர மின் விளக்கு சரி செய்ய வேண்டும் எனவும் இதே புறவழிச் சாலையில் சென்டர் மீடியாவில் அமைக்கப்பட்டுள்ள மின்விளக்குகளையும் சரி செய்ய வேண்டுமென இப்பகுதி பொதுமக்களும் வாகன ஓட்டிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சிவகாசியில் தீ விபத்தில் காயமடைந்த இளைஞர் உயிரிழந்தார்

**விருதுநகர்.ஆக.23.**

சிவகாசி அம்மன் கோவில்பட்டி பகுதியை சேர்ந்தவர் கௌதம் 27. இவர் கடந்த 19ம் தேதி வீட்டில் இருந்தபோது வீட்டின் மேல்மாடி அறையில் வைத்திருந்த பட்டாசுகள் வெடித்து சிதறியதாக கூறப்படுகிறது.இதனால் ஏற்பட்ட தீ விபத்தில் கௌதம் 80 சதவீத தீக்காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கௌதம் ஆக.22 இன்று அதிகாலை விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் . அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே கௌதம், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.இச்சம்பவம் குறித்து சிவகாசி நகர் காவல் நிலைய போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில் ரூ.23.27 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5 வட்ட செயல்முறை கிடங்குகள், 30.38 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள், தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனத்தின் சார்பில் ரூ.7.20 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 2 நவீன கிடங்குகள் ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். உடன் அமைச்சர்கள் உள்ளனர்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ரூ.104.24 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 2 ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடங்கள், கொட்டாம்பட்டி புதிய பேருந்து நிலையம், 66 புதிய பள்ளி கட்டிடங்கள், 4 புதிய நூலக கட்டிடங்கள், 49 பொது விநியோக கடைகள், 26 ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். உடன் அமைச்சர்கள் உள்ளனர்.

### பழனியில் ரூ.1.22 கோடி செலவில்

# பஞ்சாமிர்த விற்பனையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

பழநி, ஆக. 23-

பழனியில் பஞ்சாமிர்த விற்பனை நிலையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

பழநியில் ரூ.1.22 கோடி செலவில் 'ஹைடெக்' பஞ்சாமிர்தம் விற்பனை நிலையத்தை, சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலி மூலம் முதல்வர் ஸ்டாலின் வெள்ளிக்கிழமை காலை திறந்து வைத்தார்.

அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தேவஸ்தானம் சார்பில் பஞ்சாமிர்தம் பிரசாதமாக வழங்கப்படுகிறது. மேலும், அபிஷேக பஞ்சாமிர்தம் அரைக் கிலோ டப்பா ரூ.40-க்கும், டின் ரூ.45-க்கும், 200 கிராம் டப்பா ரூ.20-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதற்காக, பழநி மலைக் கோயில், சுற்றுலா பேருந்து நிலையம் உட்பட 10 இடங்களில் ஸ்டால் அமைக்கப்பட்டு பஞ்சாமிர்தம் விற்பனை செய்யப் படுகிறது. தமிழகத்தில் உள்ள கோயிலில் வழங்கப்படும் பிரசாதத்துக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டது பழநி கோயில் பஞ்சாமிர்தத்துக்கு மட்டுமே.

பழநி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்காக ரூ.99.98 கோடியில் பெருந்திட்ட வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக, பழநி மேற்கு கிரி வீதியில் மின் இழுவை ரயில் (வின்ச்) நிலையம் மற்றும் அதன் எதிரில் ரூ.1.22 கோடி செலவில் குளிர்சாதன வசதியுடன் கூடிய 'ஹைடெக்' பஞ்சாமிர்தம் விற்பனை நிலையம் கட்டப்பட்டுள்ளது.

அதனை, முதல்வர் ஸ்டாலின் காணொலி மூலம் வெள்ளிக்கிழமை நேற்று காலை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, பழநியில் நடந்த நிகழ்ச்சியில் கோயில் இணை ஆணையர் மாரிமுத்து, துணை ஆணையர் வெங்கடேஷ், அறங்காவலர் குழு உறுப்பினர் பாலசுப்பிரமணி ஆகியோர் பஞ்சாமிர்த விற்பனையை தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில் செயற்பொறியாளர் பாலு, உதவி பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதேபோல், பழநி அடுத்த சிவகிரிபட்டி ஊராட்சி தட்டான்குளத்தில் தேவஸ்தானம் சார்பில் சித்த மருத்துவ கல்லூரி கட்டப்பட உள்ள 38 ஏக்கர் நிலத்தை சுற்றிலும் ரூ.2.40 கோடி செலவில் சுற்றுச்சுவர் கட்டும் பணியை, முதல்வர் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வுகளில் உதவி ஆணையர் லட்சுமி, பொறியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் நடைபெறவுள்ள "தொல்காப்பியர் சுழலரங்கம் மாநிலம் தழுவிய வெள்ளி வட்டம்" நிகழ்ச்சி தொடர்பான இலச்சினையை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித்துறை செயலாளர் வே.ராஜாராமன், உலக தமிழாராய்ச்சி நிறுவன தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.




● மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கொட்டாம்பட்டி புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகளை நேற்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கொடியசைத்து தொட்ங்கி வைத்தார். உடன் மாவட்ட கலெக்டர் கே.ஜே.பிரவீன்குமார், மாவட்ட ஊரக வளாச்சி முகமை திட்ட இயக்குநர் வானதி ஆகியோர் உள்ளனர்.




● மதுரையில் நேற்று முன்தினம் தமிழக வெற்றிக்கழகத்தின் 2-வது மாநில மாநாடு நடந்தது. இதில் கட்சி தலைவர் விஜய், பொதுச்செயலாளர் ஆனந்த் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தேர்தல் நெருங்கும் பீகாரில்

# ரூ.13 ஆயிரம் கோடி திட்டங்களை தொடங்கி வைத்த பிரதமர் மோடி

பீகார், ஆக. 23-

தேர்தல் நெருங்கும் பீகாரில் ரூ.13 ஆயிரம் கோடி திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

பிரதமர் மோடி நேற்று பீகார் மாநிலம் கயாவில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்று ரூ.13 ஆயிரம் கோடி மதிப்பிலான பல்வேறு துறைகளின் வளர்ச்சி திட்டங்களை தொடங்கி வைத்தார்.



இதன்போது பீகார் முதல்வர் நிதிஷ் குமார், ஆளுநர் ஆரிப் கான் ஆகியோர் உடன் இருந்தனர்.

கங்கை நதியின் மேல் தேசிய நெடுஞ்சாலையில் 1.86 கிலோ மீட்டர் நீளத்திற்கு 6 வழிச்சாலையாக, ரூ.1,870 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 8.15 கிலோ மீட்டர் நீளமுள்ள அவுண்டா-சிமாரியா மேம்பாலத்தை திறந்து வைத்தார். கயா-டெல்லி இடையேயான அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில், வைஷாலி-கோடெர்மா இடையேயான ரெயில் ஆகியவற்றை தொடங்கி வைத்தார்.

பீகாரில் ஒரு சில மாதங்களில் சட்டமன்றத் தேர்தல் நெருங்கும் சூழலில் இந்த திட்டங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# டெல்லியில் தெரு நாய்களை காப்பகங்களில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

காப்பகங்களில் அடைக்க வேண்டும். தற்போதைக்கு, மற்ற விதிகளை மறந்துவிடுங்கள்.

டெல்லியின் அனைத்து பகுதிகளிலும் உடனடியாக நாய் காப்பகங்களை கட்ட வேண்டும். இந்த காப்பகங்களில், நாய்களை கையாளக் கூடிய, கருத்தடை மற்றும் நோய்த்தடுப்பு மருந்துகளை வழங்கக் கூடிய நிபுணர்கள் இருக்க வேண்டும்.

எந்தக் காரணத்தை கொண்டும் இந்த நாய்களை வெளியே விடக்கூடாது. நாய்கள் இந்த காப்பகங்களில் இருந்து தப்பிக்க முடியாது என்பதை உறுதிப்படுத்த சிசிடிவி கேமராக்கள் அமைக்கப் பட வேண்டும்.

நாய்க்கடி சம்பவங்கள் குறித்து புகாரளிக்க ஒரு ஹெல்ப்லைனைத் தொடங்க வேண்டும். டெல்லி தெருக்களை முற்றிலும் தெரு நாய்கள் இல்லாததாக மாற்ற வேண்டும். தெரு நாய்களைத் தத்தெடுக்கவும் அனுமதிக்க கூடாது' என உத்தரவிட்டனர்.

இந்த உத்தரவுக்கு நாடு முழுவதும் ஆதரவும், எதிர்ப்பும் கிளம்பியது. குறிப்பாக விலங்குகள் நல ஆர்வலர்கள் தரப்பில் இந்த தீர்ப்புக்கு எதிராக முறையீடு செய்யப்பட்டது.

இந்நிலையில், இந்த புதிய உத்தரவை உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

# இந்து சமய அறநிலையத்துறை சார்பில் புதிய...(1-ம் பக்க தொடர்ச்சி)

மதிப்பீட்டிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், அத்திமுகம், ஐராதீஸ்வரர் மற்றும் அழகேஸ்வரர் கோவில் 1.31 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், சோழவந்தான், ஜெனகை நாராயணப் பெருமாள் கோவில் 1.52 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 32.53 கோடி மதிப்பீட்டில் 9 கோவில்களை அதன் பழமை மாறாமல் புனரமைக்கும் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்றைய தினம் தொடங்கி வைத்தார்.

சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை, காரணீஸ்வரர் கோவிலில் 2.27 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு, மயிலாப்பூர், திருவள்ளுவர் கோவிலில் 2.05 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு என மொத்தம் 51.19 கோடி ரூபாய் செலவிலான 14 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எ.வ. வேலு, பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● மதுரை மாவட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி எழுச்சி பயணம் மேற்கொள்வதையொட்டி மதுரை மாநகர், புறநகர் மேற்கு, புறநகர் கிழக்கு ஆகிய மாவட்ட கழகத்தின் சார்பில் எழுச்சி பயணத்திற்குரிய அனுமதியும், தேவையான விளம்பரங்கள் செய்திடவும், ஒலி, ஒளி அமைத்து கொள்ளவும், தகுந்த பாதுகாப்பு வழங்கவும் மதுரை காவல்துறை உதவி ஆணையாளரிடம் (நுண்ணறிவு பிரிவு) முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ, சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஆர்.பி.உதயகுமார், வி.வி.ராஜன்செல்லப்பா எம்.எல்.ஏ. ஆகியோர் மனு அளித்தனர்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக முன்னாள் முதல்வருமான எடப்பாடி கே.பழனிசாமியின் திருமண நாளை முன்னிட்டு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அ.தி.மு.க. மாநில மருத்துவரணி இணைச்செயலாளர் டாக்டர் சரவணன் சிறப்பு பூஜை செய்து வழிபட்டார். இதில் நிர்வாகிகள் முனிச்சாலை சரவணன், டால்பின் அசோக், பைக்காரா செழியன், ராமசுப்பு, ராமமூர்த்தி, சுந்தர், நேருநகர் கணேசன், ரஞ்சித்முகமது உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.